387

உ

கடவுள் துணை

# செந்தமிழ்

தொகுதி-கூ.] விரோதிகிருதுஸு ஆனிமீ. [பகுதி-அ.

## மாட்சிமைபொருந்திய
## ரு-வது ஜார்ஜ் சக்கரவர்த்தியவர்களின்
## மகுடாபிஷேகம்

நாளது 1911-ஸு ஜூன்மீ 22உ நமது இந்தியாவின் சக்கரவர்த்தியான மஹா மாட்சிமை தங்கிய ஐந்தாவது ஜார்ஜ் அவர்கள் இங்கிலாந்தில் மிக்க வைபவத்துடன் மகுடாபிஷேகம் புனைந்து கொண்டார்கள். நம்மிந்தியாதேசமானது பல வரசர்களால் முற்காலத்தி லாளப்பட்டிருப்பினும், இந்தியா முழுமையு மொருவராணைக்குட்பட்டு மிக்க சமாதானத்தையும் சௌக்கியத்தையுமுற்றிருந்தது நமதுசக்கரவர்த்தியவர்களின் அரும்பெறற் பாட்டியாரான மஹா மாட்சிமை தங்கிய காலஞ்சென்ற விக்டோரியா மஹாராணியவர்களின் காலத்தே யென்பது யாரு மறுத்தற்கொண்ணா வுண்மையேயாம். ஈஸ்ட் இந்தியாக் கம்பெனியாரது ஆளுகைக்குட்பட்டிருந்த நம்மிந்தியாவானது தனக்கு முதற்சக்கரவர்த்தினியாக மாட்சிமை பொருந்திய விக்டோரியா மஹாராணியவர்களைக் கொண்டது இந்தியரது நற்றவப்பயனே; இவ் வன்னையார் இந்தியர்மீதுகாட்டிய பட்சமும் அவர்காலத்து இந்தியரடைந்த பல்வகை நலன்களும் யாவரு மெக்காலத்து மறத்தற்கொண்ணாதனவே.

தம்மன்னையின் அரசியன் முறைகளையே தாமும் பின்பற்றி நடப்பதாக வாக்களித்து அவ்வாறே உலகில் என்றும் சமாதானமே பரவவேண்டுமென்னுங் கொள்கையையே மேற்கொண்டு அரசியல்

*

நடாத்திய மஹா மாட்சிமைதங்கிய காலஞ்சென்ற எ-வது எட்வர்ட் சக்கரவர்த்தியவர்கள் தாம் பிரின்ஸ்ஆப்வேல்ஸ் ஆகவிருந்த காலத்து இவ் விந்தியாவிற்கு விஜயஞ்செய்து நம்மிந்தியர்மீது காட்டிய அன்புடைமை என்றும் நினைத்தற்குரியதே. அன்றியும் இச் சக்கரவர்த்தியவர்கள் பிணியுற்றிருந்தகாலத்து வைத்தியர்கள் இராஜ்யகாரியமான வேலையொன்றும் செய்யலாகாதெனத் தடுத்தும் தம் முயிருள்ளவரை தம் பிரஜைகளுக்குத் தாம் உழைக்கக் கடமைபூண்டுள்ளதாய்ச் சொல்லி வைத்தியர்களது சொல்லையுங் கடந்து தம் பிரஜைகளின்பொருட்டு உழைத்து உயிர்துறந்தனரென்றால், தம் பிரஜைகளைத் தம்முயிரினுஞ் சிறந்ததாகக்கொண்ட அவரது பெருந்தகைமை பல்லூழிகாலம் பாராட்டிப் புகழினும் அடங்குவதொன்றோமோ.

கற்பினுக்கரசியாய் விற்பன விவேகியாய்ப் பொற்புறு நலன்பல பொருந்துசிமாட்டியாய் விளங்கிய நம் விக்டோரியாமஹாராணியவர்களது பௌத்திரரும் அருளுறு மனத்தொடிவ் வவனியையாண்டதெருளுறு மனத்துச் சீமானும் நம் எ-வது எட்வர்ட் சக்கரவர்த்தியவர்களது புத்திரருமான இப்பொழுது மகுடாபிஷேகம் புனைந்துகொண்ட 5-வது ஜார்ஜ் அவர்களோ தமதுபாட்டியாரதும், தந்தையாரதும் அரசியன் முறைகளை யுடனிருந்தறிந்த அனுபவமுடையவராயிருத்தலோடு இவ் விந்தியர்மீது மிக்கவன்புடையரென்பதைத் தம் மனைவியாரோடு இவ் விந்தியாவிற்கு விஜயஞ்செய்து பலஇடங்களைக் கண்டுகளித்துத் திரும்பித் தன் ஊர் சென்று அங்கு நாம் இந்தியர் மீதுஅன்புகாட்டி அரசாளவேண்டுமென்று கூறிய கூற்றே தக்க சான்றாம். அன்றியும், இங்கிலாந்திற் றாம் முடிசூட்டிக் கொண்டதன்றித் தன் தேக சிரமத்தையும் பொருட்செலவையும் சிறிதுங் கருதாது தம் அரும்பெறல் மனைவியாரான க்வீன் மேரி என்னுஞ் சீமாட்டியுடன் நம் இந்தியாவிற்குவந்து டில்லியில் மகுடாபிஷேகம் புனைந்து நம்மிந்தியரனைவருங் கண்டு களிக்க வோரவகாச மருளியமை இச் சக்கரவர்த்தியவர்கள் இவ் விந்தியர்மீதுகாட்டும் பேரருளுடைமையை நன்குவிளக்கி நிற்கின்றதன்றோ. இத்தகையசக்கரவர்த்தியை நாம் அடைந்தது நம் நற்றவப்பயனே என்பதி லையமின்று. இச் சக்கரவர்த்தியவர்கட்கும் அவர்கள் மனைவி மக்கட்கும் நீடிய

ஆயுளையும் அறிவாற்றல்களையும் தந்தருள யாம் எல்லாம்வல்ல கடவுளைப் பிரார்த்திப்பது நமது கடமையேயாம். ஆதலால், இச் சக்கரவர்த்தியின் செங்கோல் நீடியநாள்விளங்கவும்,நாமனைவரும் மிகுந்த இராஜவிஸ்வாசத்துடன் நடந்து பலநன்மைகளையுமடைந்து சௌக்கியமுறவும், இறைவனை என்றும் போற்றுவோமாக.

பத்திராதிபர்.

---

உ

கணபதி துணை

# *சன்மார்க்கம்

மாட்சிமைநிறைந்த அக்கிராசனாதிபதியவர்களுக்கும் இவ்வவைக்கண் விளங்கும் ஆன்றோர்களுக்கும் பணிவுடன் செய்துகொள்ளும் அறிவிப்பு.

**அன்புமிக்க ஐயன்மீர்!**

பரமகருணாநிதியாகிய சிவபெருமான்திருவருளால் மிக அரிதிற் கிடைக்கப்பெற்ற மக்கள்யாக்கையுடையாரெல்லாரும் தம்பிறப்பானெய்தற்பாலனவாகிய உறுதிப்பயன்களை யெய்துதற்கு இன்றியமையாச் சாதனங்களாகவுள்ளவை பாஷாஞானமும், சமயஞானமுமேயாம். இவ்விரண்டனுட் பாஷாஞானமே சமயஞானத்தைத் தருதற்குரியதாகலின், முதலிற் பாஷாவிருத்தியைக்கருதி அதற்கு வேண்டுவனசெய்தல் அவ்வம்மொழியாளர்க்குரிய முக்கிய கடமையாகும். இவ்வுண்மை யுணர்ந்தே செந்தமிழ் வளங்கெழுமிய இம் மதுரைமாநகரின்கண்ணே முன்னர் முதலிடைகடையென்னு முச்சங்கநிறுவித் தமிழ்வளர்த்த தெய்வப்பாண்டியர்களனைவரும் தம் எண்ணத்தின் பயனாக ஒருருக்கொண்டு தோன்றியாங்கு இராம

* இது, மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் பத்தாம் ஆண்டு நிறைவேற்றக் கொண்டாட்ட காலத்தில் குண்டூர் டிஸ்ட்ரிக்ட் முன்சிப் ஸ்ரீமாந் J. M. நல்லசாமிப் பிள்ளையவர்கள் அக்கிராசனம் வகிப்ப, இதன் ஆக்கியோனாற் படிக்கப்பட்டது.

நாதபுரத்தில் தமிழ்மக்கள்செய்த தவப்பயனாக உதித்தவர்களும், கற்றுத்துறைபோய நற்றவக்குரிசிலுமாகிய ஸ்ரீமாந்-பொ. பாண்டித்துரைச்சாமித்தேவரவர்கள் முற்சங்கமுறை வழுவாது இச் சங்கத்தை நிறுவினார்கள். இச் சங்கம் தன் நோக்கங்கள் பலவற்றையும் இனிது நிறைவேற்றி வருதலைக்காட்சியிற்கண்டு மகிழாத்தமிழ்மக்கள் சிலரேனுமிருப்பரென்பது சிந்திக்கற்பாலதே.

இனி, இச் சங்கத்தின் பத்தாம் ஆண்டு நிறைவேற்றக் கொண்டாட்ட நிமித்தங்கூடிய இம் மகாசபையிற் படித்தற்குரியதாக ஒரு வியாசம் எழுதிவரவேண்டுமென்று இதன் தலைவரவர்கள் ஆணைதந்தனர். அவ்வாணை கடவாது ஈண்டுப்படித்தற்குரிய விடயம் யாதெனச்சிந்திக்கும்பொழுது செந்தமிழ் மொழிவளர்ச்சி கருதிய வியாசமேயுரியதாயினும், அம் மொழியின் முதலாசிரியர் சிவபெருமானேயாதலானும், அப் பெருமானை யுணர்தற்குரியநெறி சைவசமயமேயாதலானும், இவ்வுண்மை தெளிந்தே இஞ்ஞான்றும் இச் சங்கத்தலைவராகிய ஸ்ரீமாந்-தேவரவர்கள் பல, சைவப்பிரசங்கங்களால் இச் சமயவளர்ச்சியோடு மொழிவளர்ச்சியையுங்கருதி மேற்கொண்டமையானும், சைவசமயத்தைப்பற்றிய வியாசமொன்று எழுதிப்படித்தல் பொருத்தமாகுமென்று தோன்றியமையால் "சன்மார்க்கம்" என்னும் இவ் விடயத்தை யென்சிற்றறிவிற் கெட்டியவாறு எழுதத் துணிந்தேன். இங்ஙனம் பெரியாராணைகடவாமை யொன்றே கருதிக் கூறப்படும் இவ்விடயம், வேற்றுலோகக் கலப்பால் வேறுபட்ட பொன் அக்கினியைச்சார்ந்து அக் குறையொழியப்பெற்றுத் தூய்தாதல்போல், என் அறியாமையானேர்ந்த குற்றங்களை உங்கள் அறிவொளியா னொழித்து பகிழ்விக்குமென்னுந் துணிவு பெரிதுடையேன்.

ஆன்றோர்களே !

அறிவின் மிகுத்த பெரியார் வகுத்த இருதிணைப்பகுதியுள் அஃறிணையொழித்து உயர்திணைப்பகுதியின்பாற்பட்ட உயிர்கள் மனவுணர்வுடைமையான் மேலாயவென்பது வெளியாம். அவ் வுயர்திணையுட்பட்டார் மக்கள் தேவர் நரகர் என மூவகையினராவர் என்ப

இயனூலாசிரியர். இம் மூவருள்ளும் தேவர்கள் நல்வினைப்பயனென்றே நுகர்ந்து அந் நுகர்ச்சியிறுதிக்கண் அத் தெய்வசரீரமொழிய மீண்டு வினைக்கேற்ற புவனபோக தநுகரணங்களைக்கொள்வர். நரகர் தீவினைப்பயனென்றே நுகர்ந்து அதனிறுதிக்கண் பிறவினைப்பயன்களைத் துய்த்தற்கு அவ் வினைக்கேற்ற யாக்கை முதலியவற்றைக் கொள்வர். தேவர்கள் நல்வினைப்பயனாகிய இன்பத்தைத் துய்க்குங்கால் அதற்கெதிராகிய துன்பம் இனைத்தென் றுணரப்பெறாதலின், அவ் வின்பத்திலிறுமாந்து அதனையே நித்தியமென்று கருதி அக் கருத்தாற் பலவினைகளையுமீட்டுவர். நரகர் தீவினைப்பயனாகிய துன்பத்தைத் துய்க்குங்கால் அதன்கண் வெறுப்புத்தோன்றி அதற்கெதிராகிய சிற்றின்பத்தில் அவாமிக்குடையராய் அதற்கு வேண்டிய செயல்களைச்செய்வர். இவ் விருதிறத்தினரும் "வினைப்போகமே யொரு தேகங்கண்டாய்" என்றபடி நல்வினை தீவினைகள் பொன்விலங்கும் இருப்பு விலங்கும்போலத் தம்மைப்பந்திக்க அவற்றிற்கீடாகப் பலபிறப்புக்களை யெய்துவரென்பதொருதலை. தேவருட் சிலர் வீடடைதற்குரியராயிருப்பினும் பெரும்பான்மைபற்றி இங்ஙனம் கூறப்பட்டது. இந் நிலவுலகத்துள்ள மக்கட்பிறப்பினராகிய நாமோ நல்வினை தீவினைப்பயன்களாகிய இன்பத்துன்பங்களைக் கலந்தனுபவிக்கும்படி இறைவனால் நியோகிக்கப்பட்டிருக்கின்றோம்.

நாம் துன்பத்தைத் துய்க்கும்பொழுது அதன்கண் வெறுப்புத்தோன்றி அதற்கெதிராகிய சிற்றின்பத்தைவிழைகின்றோம். உடனே அத் துன்பநுகர்ச்சிநீங்க அவ் வின்பந் தலைக்கூடுகின்றது. அதனை மகிழ்ந்தனுபவிக்குங்கால் அதுவும் உடனேநீங்கப் பின்னருந்துன்பந் தொடர்கின்றது. அப்பொழுது, ஆ! சற்றுமுன்னரனுபவித்த இன்பம் எங்கே? அநித்தியமா யொழிந்ததே! அதனையே பொருளென்று நம்பியிருந்தேமே! அதனை நுகரும்பொழுது நம் பெண்டிர் மக்கள் சுற்றத்தார் நண்பர் நம்மிடத்து வைத்த அன்பு அது நீங்கியபொழுது வேறுபட்டிருக்கின்றதே! அவர்கள் அன்புசெய்தற்குரித்தாக நம் மிடத்து முன்னுள்ள செல்வம் யாண்டுச்சென்றது? ஈதென்னமாயம்! நல்வினைப்பயனுந் தீவினைப்பயனும் அழிதன்மாலையினவாயின் அழியாது நுகர்தற்குரிய இன்பம் யாண்டுள்ளது?

அதனைப்பெறுதற்கு முயறலையன்றி வேறுமுயற்சி யிதுபொழுது செய்தற்கு அவகாசமில்லையே! என்றின்னோரன்ன ஆராய்ச்சியுண்டாம். அவ் வாராய்ச்சியே வாயிலாக நாம் எய்தவேண்டிய அழிவிலாப் பேரின்பமயமான வீட்டையெய்தலாம். அங்ஙனம் அடைதற்குக்கருவியாகவுள்ளது இம் மக்கட்பிறப்பேயாதலின், மற்றெல்லா யாக்கையினும் பெறுதற்கரியது இம் மக்கள்யாக்கையே யென்பர் பெரியார்.

இனி, இவ்வரிய மக்கட்பிறப்புடையாரெல்லாரும் பரம்பொருளையெய்திப் பேரின்ப நுகர்தற்கு வாயிலாக அவ் விறைவனாற் காட்டப்பட்ட மார்க்கங்கள் வேதாகமங்களிற் பற்பலவுள்ளன. அம் மார்க்கங்களெல்லாம் பன்முகமாக ஒழுகிச்செல்லும் பல சிற்றாறுகளெல்லாம் ஒரு பேரியாற்றிற் கலப்ப, அஃது அவ் வெல்லாவற்றையுங்கொண்டு நேரே சமுத்திரத்தைச் சார்தல்போல முடிவில் ஒரு மார்க்கத்தைத் தலைப்பட அம் மார்க்கமே தன்னைச் சார்ந்தாரைப் பரம்பொருளிடத்துச் செலுத்துதற்குரியதாகும். அதுவேதன் பானேரிற் போந்தாரைப் பிறவழிகளிற் புகுத்தித் துன்புறுத்தாது செல்லுந்தோறும் செல்லுந்தோறும் அளவிலா இன்பமுறுத்தி முடிவில் ஒருதலையாக வீட்டின்பத்திற்றலைப்படுத்துவதாகும். அம் மார்க்கமே சன்மார்க்கமென்று கூறற்குரியதாகும். சன்மார்க்கமென்னும் வடசொல்லை உண்மைநெறியெனத் தமிழிற் பெயர்க்கலாம். அவ் வுண்மைநெறியிற் சென்றாரே அழிவின்றி யெஞ்ஞான்றும் ஒரே படித்தாயும் பெறுதற்குரிய அதிகாரமுடையார்க்கேயன்றி யேனையோரா னெய்தற்படாததாயும், சார்ந்தாரைப் பிறபொருளிடத்துச் சிறிதும் பற்றின்றியிருப்பச் செய்வதாயும், பேரின்பமயமாயுமுள்ள உண்மை நிலையையடைதற்குரியராவர். இனி, உண்மை நிலையை அண்முதற்குரிய நெறியே உண்மை நெறியென்று தெளிந்தமையான் முதலினுண்மைநிலை யின்னதென்று ஆராய்ந்து பின்னந் நெறியிற்படர்வேன்.

இவ் வுலகத்துத் தோன்றிய ஒருவன் சிறிது திருவருள் விளக்கம் பெற்றவுடன் சில ஆராய்ச்சியிற் றலைப்படுவன். அங்ஙனம் ஆராயப்புகும்பொழுது முதலில் நான் யார்? எனக்கு இவ்வுடல்

வந்தவாறென்னை? என்னோடொத்த பிறப்புடையார் பலரும் பல வித தோற்றமுடையராதற்கேதுவென்னை? நான் இன்பநுகரும் பொழுது மற்றொருவன் றுன்பநுகர்கின்றனனே! ஒருவனீண்ட நாளிருக்கின்றான். மற்றொருவன் மிக்க இளமையில் இறக்கின்றனனே! ஒருவன் மிக்க செல்வனாயிருக்கின்றான்; மற்றொருவன் மிக்க வறியனாயிருக்கின்றனனே! என்றின்னோரன்ன விசாரங்கழும். இவ் விசாரத்தை யிடைவிடாது ஒருவன்மேற்கொண்டு கற்றுணர்ந்த பெரியோரையடுத்து அவர்முகமாக உண்மைநூல்களைக் கேட்டுத் தெளியப் புகுவனாயின், இவ் வேறுபாட்டிற்கெல்லாங் காரணம் இருவினையாமென்பதூஉம், அவ்வினைக ளிப்பிறப்பிற் செய்யப்பட்டனவோவென்று ஆராயும்பொழுது இவ்வளவு நுகர்ச்சிக்கேற்ற வினைகளை யொருங்கே செய்பவில்லையென்பது அநுபவத்திற்றெரியுமாதலின், இவ்வளவுஞ்செய்தற்கு முன்னொரு பிறப்பு இன்றியமையாது இருத்தல்வேண்டுமென்பதூஉம், இங்ஙனமுற்பிறப்பிற் செய்த வினைகளே பிற்பிறப்பிற்குக் காரணமாயின், இப்பிறப்பிற் செய்யப்பட்ட வினைகள் காரணமாக இன்னும் பல பிறவிகள் நேருமென்பதூஉம், இங்ஙன முணர்ந்துவைத்தும் பின்னரும் அவ் வினையீட்டத்திலுள்ளஞ்சேறல் எதனாலென்பதூஉம் பிறவுமாகிய வுணர்ச்சிகளுண்டாம். அவ் வுணர்ச்சி முதிர்வின்கண் இவற்றிற்கெல்லாங்காரணமாகிய வித்தாகவுள்ளதும், ஆன்மாக்களை யநாதியேபற்றி நிற்பதும் ஆகிய மூலமலமெனப்படும் ஆணவம் ஒன்றுண்டென்னுந்தெளிவுண்டாம். ஆகவே, அவ் வாணவமாகிய வித்தினிடத்துள்ள ஆற்றல்குன்றும்படி வறுத்தாலொழிய இப் பிறவிமுளை கெடாதென்பதூஉம், அம்மலம் செம்பிற் களிம்புபோல்வதொன்றென்பதூஉம் போதரும். செம்பு தன்னைச்சார்ந்த களிம்பைத் தானே போக்குதற்குரிய ஆற்றலுடையதன்று. களிம்பும் அதனைத் தானேவிட்டு நீங்கும் இயற்கையுடையதன்று. அக் களிம்பை நீக்குதற்குரிய மருந்தொன்றும், அம் மருந்தையறிந்து சேர்த்துப் பொன்னாக்கு முறைதெரிந்த அறிஞன் ஒருவனும் வேண்டும். அதுபோல, அநாதியேபற்றிய ஆணவமல வாற்றல் உயிரைவிட்டுத்தானே நீங்குதலுமின்று. உயிரும் அதனை யொழித்தற்குரிய ஆற்றலுடையதன்று. அவ் வுயிர்க்கு மாயாமலத்தினின்றும் அஃதிட்டியவினைக்கேற்ற வுடலைக்கொடுத்துக் கன்மப்

பயனை நுகர்வித்து ஒழிந்தபின்னர்த் தந்திருவடி நீழலிற் சேர்த்து வீட்டின்பத்தைத் தருதற்குரிய இறைவன் ஒருவன் வேண்டும். ஆனால், முன்னுள்ள ஆணவமல வழுக்கைப்போக்கற்குப் பின்னும் இருமலங்களைக் கருவியாகக் கோடல் பொருந்துமோவெனின்; வெள்ளிய ஆடையிலுள்ள அழுக்கைப்போக்குதற்கு உவருஞ்சாணியுமாகிய வேறிரண்டு பொருள்களைச்சேர்த்து எல்லாவற்றையும் ஒருங்கே கழுவுதல் வண்ணானிடத்துக் காட்சியிற்றெரிந்திருக்கின்றேமாகலின் பொருந்துமென்க.

இனி, அம் மலசக்தி இறைவன் சிற்சக்தியாலொழியப்பெற்று இறைவனுடன் இரண்டறக்கலந்து சலிப்பின்றி யனுபவிக்கும்பேரின்பநிலையே உண்மைநிலையெனப்படும். இந் நிலையிலுள்ள சிவசீவர்களின் சம்பந்த விசேடத்தையே அத்துவிதமென்ப. இங்ஙனமின்றி அத்துவிதம் என்னும் சொற்கு ஏகமென்று பொருள்கொள்வாரும் உளரேயெனின், அஃது ஏகமென்னாது இரண்டற்றது என்னும் பொருள்பட அத்துவிதம் என்று உய்த்துணரவைத்தமையாற்பொருந்தாதென்க. ஒருவண்டு தேனிறைந்த மலரில் வீழ்ந்து அம் மதுவைத் தேக்கறவுண்டு களித்து அதன்கட்டோய்ந்திருக்கும் பொழுது தான்வேறு மதுவேறு என்னும் பேதவுணர்வின்றிக்கிடத்தல்போல, ஆன்மா இறைவனிடத்துப்பேரின்ப நுகர்ச்சியிற்றலைப்பட்டுத் தான்ஒருபொருளென்னும் பேதவுணர்வின்றியொன்றுபட்டிருக்கும் அந்நிலையே அத்துவித நிலையாகும். இதனைப் பெத்த நிலையிலுள்ள நம் அனுபவத்தானுமுணரலாம். எங்ஙனமெனின், இந் நிலையில் நம்மைப்பந்தித்திருக்கும் ஆணவமலத்தைப் பிரித்துணரவுங் கூடவில்லை. அங்ஙனங்கூடாமைபற்றி அம் மலம் ஆன்மாவாகிய நாமாவேமெனின், ஒவ்வோரமயம் நிகழுந்திருவருள் விளக்கத்தால் அதனாற்றல் சிறிதுகுன்றியபொழுது நமக்கு இறைவனைப்பற்றிய ஞானவிசாரந்தலைப்படக் காண்கின்றேமாகலின், நாம் அம் மலமாதலுமின்று. இதனால், ஆன்மா வேறு தனிப்பொருளென்பதூஉம், அம் மலம் ஒரு தனிப்பொருளென்பதும் தெளிந்தும் இங்ஙனமறியக்கூடாமலிரண்டும் ஒன்றுபட்டிருக்கும் இந் நிலையும் ஓரத்துவித நிலையாகும். இதனை "ஆணவத்தோடத்துவிதமானபடி மெய்ஞ்ஞானத்,

தாணுவினேடத்துவிதஞ்சாருநாளெந்நாளோ" எனவரும் ஸ்ரீ-தாயுமான சுவாமிகள் உபதேசத்தானுமுணர்க. இங்ஙனமாகிய ஆணவவாற்றலைக்கெடுத்து இறைவனுட னியைந்துநிற்றலையே உண்மைநிலையென்று கூறலாம். இவ் வுண்மைநிலை யெய்திய ஆன்மா மீண்டு பிறத்தற்குக்காரணமாகிய மலத்தொடர்பின்மையால் அவ் விறைப்பொருளோடு இரண்டறக்கலந்து பேரானந்தப் பெருவாழ்விலே நிலைபெற்றிருக்கும்.

இத்துணையுங் கூறியவாற்றால், உண்மைநிலை யின்னதென்பது ஒருவாறு தெளியப்பட்டதாகலின்; இனி, அந் நிலையை யடைதற்குரிய உண்மை நெறியாகிய சன்மார்க்கம் இன்னதென்பதை யாராய்வேன். உண்மைநிலை கூறுங்காற் றெளியப்பட்ட நித்தியப்பொருள்கள் மூன்றாகும். அவை, பதி பசு பாசங்களாம். பாசத்தை முற்கூறியபடி மூன்றாகவும், வேறொருவகையா னைந்தாகவுங்கொள்வர். இதனை "ஏகனநேகனிருள் கருமமாயையிரண்டு" என்பதனானுமறிக. இனி, ஈண்டுக்கூறப்பட்ட பதிப்பொருள் யாது? அதனுண்மை யெப்பிரமாணத்தாற்றெளியலாம்? என்னும் ஆராய்ச்சியிற்றொடங்கினால், முடிவில் அப் பொருள்சிவமும் அதனை முதலிலறிதற்குரிய பிரமாணம் அநுமானமுமாமென்பது வெளியாம். அளவைகள் பலவற்றுள் காட்சி உவமான முதலிய அளவைகளாற் சிவபிரானையறிதல்கூடாது. என்னை, அவர் அவாங்மனகோசரராகியும், அகண்டாகார நித்தவியாபக சச்சிதாநந்தப்பிழம்பாயும், பதிஞானத்தானன்றிப் பாசபசு ஞானங்களா னறியப்படாதவராகியு முள்ளாராதலின். இனி, உரையளவையாகிய வேதாகமங்கள் அப்பதியினலருளப்பட்டனவாகலின் பிரமாணங்களாமேயெனின்; பதியுண்மை தெளிந்தன்றே பதிவாக்குப் பிரமாணமாகும். அங்ஙனந்தெளிதற்குமுன்னர் எங்ஙனம் பிரமாணமாமென்ற வினவினர்க்கு விடைகூறுதலிடர்ப்படுமாதலின், முதலிற் கருதலளவையானேயிறைவனை யறிதல்வேண்டும். எங்ஙனமெனின்: அவயவப்பகுப்புடையனவாய்க் காரியரூபமாகவுள்ள நானாவிதமான இவ் வுலக அமைப்புக்களை நோக்கினால் இவை யொருவனலாக்கப்பட்டனவென்பதுவெளியாகும்.

குட முதலிய காரியப்பொருள்கள் ஒரு கர்த்தாவாற் செய்யப்பட்டனவென்பது காட்சியளவையிற் றெரிந்திருக்கின்றேமாகலின், குடத்தின்றோற்றத்திற்குக் குலாலன் நிமித்த காரணமும், மண் முதற்காரணமும், தண்டசக்கரங்கள் துணைக்காரணமுமாதல்போல, இவ் வுலகத்தோற்றத்துக்குச் சிவபெருமான் நிமித்தகாரணமும், மாயை முதற்காரணமும், சிவசக்தி துணைக்காரணமுமாகும். இங்ஙனம் அநுமான அளவையா னிச்சயிக்கப்பட்ட கடவுள் பின்னர் நூலளவையா னன்குதெளியப்படுவர். நூல்களுண் முதனூல்களாகவுள்ளவை வேதசிவாகமங்களேயாம். இவற்றையருளியவர் பரமசிவனேயாவர். இதனை "சர்வ வித்தைகளுக்கும் ஈசானர் (கருத்தா)" எனவும், "(வேதம்) பரம்பொருளினாற் சுவாசிக்கப்பட்டது" எனவும் வரும் சுருதிகளானும், "ஈஶாநஸ் ஸர்வவித்யாநாமீஶ்வரஸ் ஸர்வஹிதம் வக்த்ருநா । ஸூதிகர்த்தா ஶிவஸ்ஸாக்ஷாத் ஸர்வேஷாமிதி ஶ்ருதி: ॥" என்னும் வாயு சங்கிதையானும் உணர்க. இவ் வேதசிவாகமங்களிரண்டும் முடிவில் ஒரு பொருளனவேயாம். ஒரு பொருளனவாக இருவித நூல்களேன் செய்தல்வேண்டும்? ஒன்றே போதாதோவெனின்: முன்னது உலகத்தின் மக்களறிவிற்கேற்றவாறு பலதேவர்களையும் பரம்பொருளென உபசாரமாகக்கூறித் தூலாருந்ததி நியாயமாகக் காட்டி அவரை நல்வழிப்படுத்தப் பொதுவாகவும், பின்னது மலபரிபாக மெய்திய பக்குவான்மாக்கள்பொருட்டுச் சிறப்பாகவும் அருளப்பட்டனவாம். வேதம் பொருள்பலபடத் தோன்றுஞ் சூத்திரம் போலவும், சிவாகமம் அதனை யங்ஙனமாகவொட்டாது தெளித்துரைக்கும் பாடியம் போலவுஞ்சிவபெருமானலருளப்பட்டனவென்பர் பெரியார். அவ் விரண்டனுட் சிவாகமம் வெளிப்படையாகச்சிவனே பரம்பொருளென்று கூறுதலின் அதனைவிட்டுப் பொதுவகையாகக் கூறும் வேதத்தின் அந்தரங்கத்தைச் சிறிதாராய்வேன்.

வேதத்திற் சிவபிரான் பிரமம், பசுபதி முதலிய சப்தங்களானும் சிவசப்தத்தானுங் கூறப்படுவர். கேநோபநிடதத்தில் இயக்கவுருவந்தாங்கி வந்த பரமசிவனை யறியாது மயங்கிய இந்திரனை நோக்கி அப்பெருமானுடைய சக்தியும், இமவான் புத்திரியுமாகிய உமையம்மையார் இவ் வியக்கன்பிரமம், என்று கூறினமை தெளியப்படுதலானும்

பிறவற்றானும் பிரமசப்தம் சிவபிரானையுணர்த்தலறிக. பிரமசப்தம் சிவனை யுணர்த்தல் ஆண்டுவெளிப்படையாகவின்மையால் வேறு தெய்வத்தைக்குறிக்குங்கொலோவென்றையுறுவார்; அஃதுஉமையாற் கூறப்பட்டமையானும், இச் சரித்திரத்தைப் புராணவாயிலாக விளக்கிய வியாசமுனிவர் இயக்கவுருவந்தாங்கிவந்தவர் சிவபெருமானே யாவர் என்று கண்டோக்தியாற் கூறுதலானும் மலைவின்றித் தெளிவாராக. இனி, வேறு தேவர்களைப்பற்றியும் வேதத்தில் பிரமசப்தம் கேட்கப்படுகின்றதாலோவெனின்: தேவர்களேயன்றி அன்ன முதலிய சடப்பொருள்களும் பிரமமென்று கூறப்படுகின்றனவாதலானும், அவையெல்லாம் உலகவின்பத்தில் விருப்புற்ற ஆன்மாவை அது விரும்பியதொன்றைப் பெரிதாகக்கூறி யவ்வளவிலிழுத்துப் பின் அதனையுவர்ப்பித்து மேன்மேற்கொண்டு செலுத்தற்குப் பரமகருணாநிதியாகிய சிவபெருமான் செய்த உபாயமாதலானும் உபசாரமேயாமென்க.

அவை யுபசாரமென்பதும் சிவனைப்பற்றிக்கூறியது உண்மையென்பதும் எதனாற் பெறுதுமெனின்: எஜுர்வேதத்துள்ள சமகமந்திரங்கள் திருமால் பிரமன் முதலிய தேவர்களை அன்னத்தோடு சேர்த்து ஈயப்படும் பொருளாகக் கூறினமையானும், சிவபெருமான் ஈயுந்தாதாவாகலி னவரையங்ஙனங்கூறாமையானும், வேதத்திரயங்களின் மத்தியில் பஞ்சாக்கரமும், அதன் மத்தியிற் சிவசப்தமும் வேதங்களின் இருதயத்தானத்தில் விளங்குதலானும், பிறவற்றானும் பிரம விலக்கணமுற்றுஞ் சிவபிரானுக்கே யுரியனவாதல் தெளியலாம்.

(இன்னும் வரும்)

மு. கதிரேசச்செட்டி.

உ

சிவமயம்

# இராமாவதாரச்செய்யுட்பாடாந்தரமும்

## அருஞ்பத விளக்கமும்

### யுத்தகாண்டம்

### கடல்காண்படலம்

காப்பு

க. ஒன்றே யென்னி னொன்றேயாம் பலவென் றுரைக்கிற் பலவேயா
மன்றே யென்னி னன்றேயா மாமென் றுரைக்கி னாமேயா
மின்றே யென்னி னின்றேயா மிலதென் றுரைக்கி னிலதேயா
நன்றே நம்பி குடிவாழ்க்கை நமக்கிங் கென்னோ பிழைப்பம்மா.

என்னுமிச் செய்யுளில், "இன்றே யென்னி னின்றேயா மிலதென் றுரைக்கி னிலதேயாம்" என்பது, "இன்றே யென்னி னின்றேயா முளதென் றுரைக்கி னுளதேயாம்" எனக்காணப்படுகின்றது. 'இன்று' என்பதன் பொருளிலேயே 'இலது' என்பதும் வருதலின் முன்னையது பொருந்தாமையிற் பின்னையதே பொருத்தமுடைத்து. 'ஒன்று' என்பதற்குப் 'பல' என்பது முரண்டொடையா யமைந்ததுபோலவே 'இன்று' என்பதற்கும் 'உளது' என்பது முரண்டொடையாய் அமைந்து வந்தது எனக்கொள்க. அன்று ஒன்றும் பலவுமல்லாதது என முன்னையவற்றை மறுத்து வந்தது. ஆம் அன்றுஎன்பதனுடன்பாடு. இன்று உளது என்பன இன்மை உண்மைப்பொருளில் வந்தன. பிழைப்பு - உய்வு. நிலையில்லாத குடிவாழ்க்கையையுடையானை நம்பிக் குடிவாழும் நமக்கும் அந்நிலையின்மையே யன்றி உய்வு எப்படி யுண்டாகும் என்பதாம். இப்படிப்பட்டவர் என்று அறியப்படாதாரை அறிந்து வணங்கி நாம் ஈடேறுவதெப்படி என்பது கருத்து. இங்ஙனமே "மைப்படிந்த கண்ணாளுந்தானும்........இப்படியனிந்நிறத்தனிவ்வண்ணத்த னிவனிறைவ னென்றெழுதிக் காட்டொணாதே" எனப்பிறரும் கூறுதல் காண்க.

(உ) ஊழிதிரியுங்காலத்துமுலையாநிலையவுயர்கிரியும்
வாழிவற்றுமறிகடலுமண்ணும்வடபால்வான்றோயப்
பாழித்தெற்குள்ளனகிரியுநிலனுந்தாழப்பரந்தெழுந்த
எழுபத்தின்பெருவெள்ளமகரவெள்ளத்திறுத்ததால்.

கிரி - மேருமலை. தோயத்தாழும்படி பரந்தெழுந்த வெள்ளம் என்க. சைனியங்கள் தென்றிசையை நோக்கி வருதலால் தென்றிசையின்கணுள்ளன தாழ வடதிசையின்கணுள்ளன உயர்ந்தன என்பது கருத்து. எழுபத்தின் பெருவெள்ளம் - பெரிய எழுபது வெள்ளங் குரங்குச்சேனை. மகரவெள்ளம் - கடல்.

(ங) பொங்கிப்பரந்தபெருஞ்சேனைபுறத்துமகத்தும்புடைசுற்றச்
சங்கிற்பொலிந்தகையாளைப்பிரிந்தபின்புதமக்கினமாங்
கொங்கிற்பொலிந்ததாமரையின்சூழவுந்துயில்வுற்றிதழ்குவிக்குங்
கங்குற்பொழுதுந்துயிலாதகண்ணன்கடலைக்கண்ணுற்றான்.

சங்கு - வளை. தம் என்றது கண்களை. இனமென்றது தாமரைக் கண்ணுதல் பற்றி. துயில்வுற்று - ஒடுங்கி. நெடுங்காலம் சுமந்து பழகிய தாமரை துயிலவும், சிறிதுகாலம் கண்டுபழகிய தாம் துயிலாத கண்கள் எனக் கண்ணின் பிரிவாற்றாமைச் சிறப்புக்கூறியவாறு. துயிலற்குரிய இராக்காலத்தும் என நிற்றலால் உம்மை சிறப்பு. சூழ்ந்து நிற்பக் கண்ணன்கடலைக் கண்ணுற்றான் என்க. புறத்தும் அகத்தும்புடைசுற்ற என்பதற்குப் புறத்தானும் அகத்தானும் புடையே சுற்ற என ஆனுருபுவிரித்துப் பொருள்கொள்க. புறத்தாற்சூழ்தல் - உடம்பாற் சூழ்தல். அகத்தாற் சூழ்தல் - அன்பு பூண்டு நிற்றல். உள்ளும் புறம்புமொத்தபடி சூழ என்றபடி.

(ச) சேயகாலம்பிரிந்தகலத்திரிந்தான்மீண்டுஞ்சேக்கையின்பால்
மாயன்வந்தானினிவளர்வானென்றுகருதிவருந்தென்றல்
தூயமலர்போனுரைத்தொகையுமுத்துஞ்சிந்திப்புடைசுருட்டிப்
பாயலுதறிப்படுப்பதேயொத்ததிரையின்பரப்பம்மா.

சேயகாலம் - நெடுங்காலம். அகல - தூர. சேக்கை - சயனம். வளர்தல் - கண்வளர்தல்=துயிறல். திரையின் பரப்பு, தென்றலாகிய ஏவலாளன் சிந்திச்சுருட்டி உதறிப்படுப்பது போன்றது என்க;

400

இது தற்குறிப்பு. முன்துயின்ற பாயலாதலின் அதன்கணிட்ட மலரும் உதிர்ந்த முத்துக்களும் கிடந்தன என்க. மாலையின் மலருமாம்.

(௫) வழிக்குங்கண்ணீரழுவத்துவஞ்சியழுங்கவந்தடுத்த
பழிக்குங்காமன்பூங்கணைக்கும்பற்றாநின்றான்பொற்றோளைச்
சுழிக்குங்கொல்லனெல்லுலையிற்றுள்ளும்பொறியிற்சுடுமென்னோ
கொழிக்குங்கடலினெடுந்திரைவாய்த்தென்றறூற்றுங்குறுந்திவலை.

வழிக்கும் கண்ணீர் அழுவம் - கையால் வழித்து வீசுகின்ற கண்ணீர்ப்பரப்பு. பற்று - பற்றுக்கோடு. பற்றா நின்றான் என்பதற்குப் போதாமல் நின்றவன் என்பாருமுளர். திவலைசுடும் என்க. சுழிக்கும் - சுழித்தெழும்; இதனைப் பொறியோடுமுடிக்க. அக்கினி சுழித்தெழும் உலை எனினுமாம். விகாரமுடையனாதலிற் சுடும் என்க. இயல்பிலே குளிருந்திவலை இவன்றோளைச் சுடும் இஃது என்ன நூதனம் என்பதாம். திரைவாய்த்தென்றல் தூற்றுங் குறுந்திவலை - திரையினிடத்துள்ள தென்றலாற் றூற்றப்படும் சிறிய துளி

(௬) நென்னற்கண்டதிருமேனியின்றுபிறிதாய்நிலைதளர்வான்
றன்னைக்கண்டுமிரங்காதுதனியேகதறுந்தடங்கடல்வாய்ப்
பின்னற்றிரைமேற்றவழ்கின்றபிள்ளைத்தென்றல்கள்ளுயிர்க்கும்
புன்னைக்குறும்பூநறுஞ்சுண்ணம்பூசாதொருகாற்போகாதே.

நென்னல் - முன்னைநாள். தன் மருகனைக்கண்டும் தான்கதறில் அவனுக்கு அதிக மனவருத்தத்தைக்கொடுக்கும் என்று இரங்காமல் துக்கமிகுதியால் தனியே கிடந்துகதறும் கடல் என்க. கடலொலியும் பிரிவுடையார்க்கு அதிகவருத்தத்தைக் கொடுக்குமாதலின் அதனை ஆசிரியர் இவ்வாறு நூதனமாகப் புணர்த்தார் என்க. மாமியர் மருகரைக் கட்டித்தழுவி அழாது தனியேயிருந்து அழுவதே உலக வழக்காதலின் 'தனியே' என்றும், தன் அருமைப் புதல்வியைப் பிரியக்கொடுத்த துக்கத்தைப் பொறுக்கமுடியாது பெருஞ் சத்தமிட்டுப்புலம்பியது என்பது தோன்ற 'கதறும்' என்றுங் கூறினார். பின்னற்றிரை - ஒன்றோடொன்று சேர்ந்து வருகின்ற திரை. ஸ்ரீராமன் தலைவியைப்பிரிந்து வருந்துகின்றானே அவன்மீது நாம் இச் சுண்ணத்தைப்பூசின் அவனுக்கு அதிகவருத்தமுண்டாகுமே

என்பதைச் சிறுபிள்ளையாதலிற் றெரிந்திலதென்பார் பிள்ளைத்தென்றல் என்றார். பூசுதல் வினைகொடுத்தார், மைத்துனன் என்னு முரிமை தோன்றுதற் கென்க. சிறுபிள்ளை மைத்துனன் சிறிது மச்சமின்றித்தீண்டிப் பூசுவான் என்க.

(எ) சிலைமேற்கொண்டதிருநெடுங்தோட்குவமைமலையுஞ்சிறிதேய்ப்ப
நிலைமேற்கொண்டுமெலிகின்றநெடியோன்றன்முன்படியேழுந்
தலைமேற்கொண்டகற்பினுண் மணிவாயென்னத்தனித்தோன்றிக்[ளம்.
கொலைமேற்கொண்டாருயிர்குடிக்குங்கூற்றங்கொல்லோகொடிப்பவ

மேற்கொள்ளல் - சுமத்தல். துக்கமின்றிப் பூரித்திருக்குங் காலத்துத் தோற்று, இப்பொழுது மெலிந்திருத்தலால் சிறிது ஒத்தது என்க. இராவணனாற் கவரப்பட்டுந் தன் கற்பிற் சிறிதுந் தவறடைந்திலளாதலின் உலக மவளைக்கற்பிற் சிறந்தாரெவரினும் மேலாகக்கொண்டுள்ள தென்பார் உலகேழுந் தலைமேற்கொண்ட கற்பினுள் என்றார். ஏழுலகத்து மவளே சிறந்தவளென்றபடி. கொடிப்பவளம்தோன்றிக்குடிக்கும் ஆதலால் இஃது ஒரு கூற்றமோ என்க. உவமான உவமேய வேற்றுமையின்றி யதுவாயே காணப்பட்டதென்பார் மணிவாயென்னத் தனித்தோன்றி யென்றும், சீதைவாய் போலக் காணப்பட்டு ஸ்ரீராமனுயிரை இறந்துபடச் செய்தலின் குடிக்கும் என்றும், உயிர்குடித்தலிற் கூற்றமோ வென்றுங் கூறினர் என்க. கொலைமேற்கொண்டு ஆருயிர் குடிக்கும் எனக்கண்ணழிக்க. குடிக்கும், செய்யுமென்னு முற்று.

(அ) தூரமில்லைமயிலிருந்தசூழலென்றுமனஞ்செல்ல
வீரவில்லிநெடுமானம்வெல்லநாளுமெலிவானுச்
சோமில்லாநிருதரோடென்னவுறவுண்டுனக்கேழை
மூரன்முறுவற்குறிகாட்டிமுத்தேயுலகைமுடிப்பாயோ.

மெலிவானுக்கு ஏழைமுறுவற்குறிகாட்டி உலகை முடிப்பாயோ? முத்தே உனக்கு நிருதரோடு என்ன உறவு உண்டு எங்க. முறுவற்குறிகாட்டின் அவனிறந்து படும்; படவே உலகுமிறந்து படுமென்பார் உலகை முடிப்பாயோ என்றும், சீதாபிராட்டியிருந்த இடமோ சமீபமாயிருக்கின்றது; நாமங்கேபோ யவளைக்காண்பேமென்று மனம் செல்லுமாறு எழவும், களவாண் இராக்கதனைக் கொன்

றே யன்றி அவளையாங் காணுதல் எமது வில்வீரத்திற் கிழுக்காய் முடியுமென்கின்ற அபிமானம் அதனைத்தடுத்துவிட்டதென்பார் மனஞ் செல்ல.........மானம் வெல்ல என்றுங்கூறினர். நிருதரோடு உறவு இருந்தபடியாற்றான் ஸ்ரீராமனை முடிக்கும் வழியால் உலகை முடிக்க எண்ணுகின்றாய் என்பதாம்.

(௯) இந்துவன்னநுதற்பேதையிருந்தாணீங்காவிடர்கொடியேன்
றந்தபாவைதவப்பாவைதனிமைதகவோவெனத்தளர்ந்து
சிந்துகின்றநறுந்தாளக்கண்ணீர்ததும்பித்திரைத்தெழுந்து
வந்துவள்ளன்மலர்த்தாளின்வீழ்வதேய்க்குமறிகடலே.

இந்து - எண்ணாட்டிங்கள். "பிரித்தன்னபிள்ளைத்திங்களனை யொருபெரியதிங்க, டரித்தன்னநுதலியோடும்" என்று பிறரும் இவ்வாறு கூறுதல் காண்க. இடரில் இருந்தாள் என்க. பாவியேன் றந்த கண்மணிப் பாவையும் தவம்போலும் பாவையுமாகிய அவள் தனிமை என்க. தளர்ந்து கண்ணீர்ததும்பித் தேம்பி எழுந்து விழுந்து அழுதலையொக்கும் என அழுவாரியல்பைக் கடலின்மேலேற்றுதலின் இது தற்குறிப்பு. தளர்தல் - அசைவையும், தளர்தலையும்; திரைத்தல் - திரைகொள்ளுதலையும், தேம்புதலையும் உணர்த்திநின்றன. தாளமாகிய கண்ணீர்.

(௧௦) பள்ளியாவிற்பேருலகம்பசுங்கல்லாகப்பனிக்கற்றை
துள்ளுநறுமென்புனறெளிப்பத்தாநீர்க்குழவிமுறைசுற்றி
வெள்ளிவண்ணநுரைக்கலவைவெதும்புமண்ணறிருமேனிக்
கள்ளியப்பத்திரைக்காத்தாலரைப்பதேய்க்குமணியாழி.

பள்ளி அரவு - சேடன். சேடன்றலையிலுள்ளபேருலகம். விகார வருத்தத்தால் வெதும்புகின்றமேனி. நுரையாகிய கலவைச்சாந்து; இஃது உருவகத்தோடுகூடியதற்குறிப்பு.

(௧௧) கொங்கைக்குயிலைத்துயர்நீக்கியிமையோர்க்குற்றகுறைமுற்ற
வெங்கைச்சிலையன்றாணியினன்விடாதுமுனிவின்மேற்செல்லுங்
கங்கைத்திருநாடுடையானைக்கண்டுநெஞ்சங்களிகூர
வங்கைத்திரள்கவெடுத்தோடியார்த்ததொத்ததணியாழி.

துயர்நீக்கி - துயரினின்று நீக்கி. சிலையனையுந் தூணியனையும் மேற்செல்லும் கங்கைத் திருநாடுடையானை என்க. விடாது - சோராது. கடல் திரைகளைவீசி ஆரவாரித்தல் ஸ்ரீ ராமனைக்கண்டு மனம் களிப்புமிகக் (எதிர்கொண்டு) கைகளை நீட்டி ஓடிச்சென்று (வாவென்றழைத்து) ஆரவாரித்தலை ஒத்தது என்க. மேற்சேறல் - போர்க்குப் பகைவர்மேற் சேறல்.

(௧௨) இன்னதாயகருங்கடலையெய்தியிதனுக்கெழுமடங்கு
தன்னதாயஓர்மானந்துயரங்காதலிவைதழைப்ப
வென்னதாகுமேல்விளைவென்றிருந்தானிராமனிகலிலங்கைப்
பின்னதாயகாரியமுநிகழ்ந்தபொருளும்பேசுவாம்.

இன்னதாய - இவ்வியல்பினதாய. இதனுக்கு என்பதிற் குவ்வுருபு இன் உருபின் பொருட்கண் வந்தது. மானம் தன்மனைவியை இராவணன் கவரவிடுத்த மானம். துயரம் - அவளைப்பிரிந்த துயரம். காதல் - அவளிடத்துக்கொண்டகாதல். மேல்விளைவு என்னதாகுமென்றிருந்தான் - அனுமன் தூதுபோய் வந்ததின்மேல் நடந்த சம்பவம் யாதாகுமோ என்று எண்ணிக்கொண்டிருந்தான். இனிச்செய்யக் கிடந்தகாரியம் யாதாகும் என்று எண்ணியிருந்தான் என்றல் இத்துணைச்சிறப்பின்று. பின்னதாய காரியம்: நகர்புதுக்கல், மந்திரம்முதலியன. அதன்மேல் நிகழ்ந்த காரியம் விபீடணனடைக்கலம் புகுதல், வருணனை வழிவேண்டல், சேதுபந்தனம், போர் முதலியன.

சி. கணேசையர்.

---

## NOTES ON ASTROLOGY

# சோதிடநூற் குறிப்புகள்

(௧௫௬-ஆம் பக்கத்தொடர்ச்சி)

இந்தக்காலத்திற் சாதாரணமாகச் சோதிடம் பார்ப்பதற்கு உபயோகப்படுத்துகிற கிரகங்களாவன:—1. சூரியன், 2. சந்திரன், 3. அங்காரகன், 4. புதன், 5. குரு, 6. சுக்கிரன், 7. சனி, 8. ராகு,

9. கேது என்பவைகளாம். கடைசியாகக் குறிக்கப்பெற்ற ராகு, கேது என்னுமிரண்டு கிரகங்களும் ஸ்வதந்திரமாக வர்த்திப்பனவல்லவென்றுஞ், சாயாக்கிரகங்களென்றுஞ் சொல்லப்படும். மழைவீழ்ச்சி, அகவிலையின் நிலைமை, வேளாண்மைப்பயன் முதலிய சிற்சில சங்கதிகளைப்பற்றி முன்னராகத் தெரிவதற்குச் சில உபக்கிரகங்களையும் எடுத்துக்கொள்ளுகிறார்கள். அவையாவன,—1. இந்திரசாபம் (வில், சிலை), 2. தூமகேது (தூமன்), 3. பரிவேஷம் (பரிவேடம், வட்டம்=சந்திரனைச்சுற்றிக் காணப்படும் வட்டம்), 4. குளிகன், 5. இயமகண்டகன்.

இந்துக்கள் மூடபக்தி மிகுந்தவர்களாதலின் வெறும் பிரகிருதி கோளங்களை உயிர்ப்பிராணிகளெனக் கருதி அவைகளுக்குக் கிரகங்களெனப் பெயரிட்டு மானிடருக்குரிய நேசம், நட்பு, பகை முதலிய (ராகத்துவேஷாதி) குணங்களைச் சொல்லுகிறார்களென்று மேற்றிசையார் சிலர் குறைகூறுவதுண்டு. ஆனால், அவர்கள் இந்துக்களின் மனோபாவத்தை நன்றாக உணர்ந்தவர்களல்லர். சூரியன், சந்திரனாதியாகவுள்ளகிரகங்களின் மண்டலங்கள் (நமக்குக் காணப்படும் வட்டவீச்சுகள்) பிரகிருதியினால் ஆகியவைகளென்பதில் ஐயமில்லை; அந்த மண்டலங்கள் ஆறுகளும் மலைகளும் நிறைந்து வாஸயோக்கியமாகவே இருக்கின்றன. இந்துக்கள் இந்தச் சங்கதியை யொப்புக்கொள்கிறார்களேயன்றி மறுப்பதில்லை. இராமாயணத்தில் இராவணனுடைய யாத்திரைகளின் வர்ணனைகளைப் பார்த்தாலும் இந்தக்கிரகமண்டலங்களின் விவரங்கள் பூர்த்தியாக அகப்படும்.

ஒவ்வொரு தேசத்திற்கும் அதனையாளும் அதிபதியின் பெயரையே வைப்பது வழக்கமாதலின், மேற்சொல்லிய கிரகமண்டலங்களுக்கு அவற்றிற்கு அதிபதியாக இருந்து ஆட்சி செலுத்துகிறவர்களின் பெயர்களே வைக்கப்பட்டன. அந்த அதிபதிகள் மானிடரான நம்மைப்போலவே உருவம் புலன்கள் உணர்ச்சி ஆகிய இவைபொருந்தியவர்களாகவும், ஆனால் நம்மைவிட அறிவிற்சிறந்தவர்களாகவும் இருக்கிறார்கள். ரிஷிகள் தினந்தோறும் பூஜிப்பது அந்த அதிபதிகளையே யாகும்; பிராமணர்கள் தர்ப்பணம் விடுவது அந்த அதிபதிகளுக்கேயாகும். இந்த விஷயத்தை மறக்கலாகாது; ஏனெனில்,

வேதமந்திரங்களின் அர்த்தத்தை விசாரித்தறிவதற்கு இந்த வித்தியாசம் (கிரகமண்டலங்களுக்கும் கிரகாதிபதிகளுக்குமுள்ள வித்தியாசம்) நமக்கு ஞாபகத்திலிருக்கவேண்டியது அவசியமாகும்.

மற்றுமொருவிஷயமும் கவனித்தற்பாலதாகும். அநேக சோதிடநூல்களிற் சிற்சிலநக்ஷத்திரங்களும் கிரகங்களும் குருடெனச் சொல்லப்பட்டிருக்கின்றன; வேறு சில குரூரமிகுந்தவையெனவும், மற்றுஞ்சில முடமெனவும், இன்னும் பலவாறாக விவரிக்கப்பட்டிருக்கின்றன. இப்படிச்சொல்லிய லக்ஷணங்கள் அந்தந்த கிரகங்களுக்கும் நக்ஷத்திரங்களுக்கும் சாரா; அந்தந்த கிரகங்களுக்கும் நக்ஷத்திரங்களுக்கும் அதிபதிகளாகவுள்ளவர்களைச் சாரும். அந்த அதிபதிகளின் ஆட்சிக்குட்பட்ட மனிதர்களுக்கு அவர்கள் தம் லக்ஷணங்களை (குருடு, செவிடு, முடம், குரூரத்துவம் ஆதியன) உண்டாக்குவதே அவர்களின்காரியமாம். மரணதண்டனைநிறைவேற்றுவோனொருவனைக் குரூரனெனவர்ணிப்பதுவே வழக்கமாகும். ஏனெனில், அவனுடைய தொழில் அப்படிப்பட்டதாக இருக்கின்றது. ஆனால், இயற்கையில் அவன் மிகவும் இரக்கமுடையவனாக இருக்கலாம். கிரகங்களின் விஷயத்திலும் அப்படியே யென்க. கிரகாதிபதிகளெல்லாரும் பரமபுருஷனது தூதர்களாவர். அந்தப் பரமபுருஷனுடைய கட்டளைகளை நிறைவேற்றுவதே அவர்களுக்குக் காரியமாகும். சோதிடக்கிரந்தங்களில், ஒரே கிரகத்தைக் குரூரனென்றும் கருணாநிதியென்றும் (இவ்வாறு ஒவ்வாத குணங்கள் பொருந்தியிருப்பதாக) சொல்லுமிடத்து மேலே விவரித்த நியாயத்தை ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும்.

### தாராகணங்கள்

மேற்சொல்லிய கிரகங்களல்லாமல் ஆரியச்சோதிடசாஸ்திரிகள் இருபத்தேழு தாராகணங்களைக் கணிக்கின்றார்கள். தாராகணம் என்பது நக்ஷத்திரக்கூட்டம். ஒவ்வொரு கணத்திலும் பல நக்ஷத்திரங்களிருக்கின்றன. அவை நிலையான நக்ஷத்திரங்களாகும். அவை மேற்சொல்லிய கிரகங்களுக்கு அப்பால் வெகுதூரத்திலிருக்கின்றன; பன்னிரண்டு ராசிப்பிரதேசங்களுள் ஒவ்வொன்றின் தொடக்கத்தையும் (எல்லைமானத்தையும்) பகுத்தறிவதற்கு அவை உதவுகின்றன.

எங்ஙனமெனின், அசுவினி நக்ஷத்திரமும் பரணிநக்ஷத்திரமுங் கிருத்திகா நக்ஷத்திரத்தின் காற்பகுதியுங்கூடி மேஷராசியின் பிரதேசத்தைக் குறிக்கின்றன; அவற்றிற்கு அடுத்த இரண்டேகால் நக்ஷத்திரங்கள் இரண்டாவது ராசியான விருஷபத்தைக் குறிக்கின்றன. இங்ஙனம் இருபத்தேழு நக்ஷத்திரங்களும் $27 \div 2\frac{1}{4} = 12$ (பன்னிரண்டு) ராசிகளைக் குறிக்கின்றன.

இதன் தாற்பரிய மென்னையெனின், பூகோளத்தின் மத்தியினின்று வரையப்பெற்ற அர்த்தவிட்டங்கள் (radii) பன்னிரண்டும் நக்ஷத்திரங்களைப்போயெட்டுகின்றன. அப்படிப்பட்ட இரண்டு அர்த்தவிட்டங்களினாலாக்கப்பட்ட விருத்தபாக (sector) ப்பிரதேசம் ஒவ்வொன்றும் ஒவ்வொருராசியெனப்படும். ஒருகிரகம் ஒருராசியிற் சஞ்சரிக்கின்றது எனின், அந்த ராசிக்குள்ள பிரதேசத்திற் சஞ்சரிக்கின்றது என்பது பொருளேயன்றி அந்த ராசியைக் குறிக்கிற நக்ஷத்திரங்களைச் சந்திக்கிறதென்பதாவது அந்த நக்ஷத்திரங்களோடு முட்டிக்கொள்ளுகின்றதென்பதாவது பொருளன்று. இப்படியே, இரண்டுமூன்று கிரகங்கள் ஒரேராசியிற் சஞ்சரிப்பதாகச் சொல்லும்போது, அவை ஒன்றோடொன்று உரைவதில்லை, முட்டிக்கொள்வதுமில்லை; அவை வேறுவேறாகவே இருக்கின்றன; அவை சஞ்சரிக்கும்போது ஒன்றின் சாயை மற்றொன்றின்மீது படுவதனால் கிரகணங்கள் என நாம் வழங்குங்காட்சிகள் தோற்றுகின்றன. சோதிடத்தில் நக்ஷத்திரங்களைக்குறிப்பது முக்கியமாகத் தேசபாகங்களைப் பகுத்தறியும்பொருட்டேயாம். ஆதலின், ஒருகிரகம் ஒருராசிக்குப் போவதாகப் பஞ்சாங்கத்திற் சொல்லும் போது அந்த ராசியிலடங்கிய நக்ஷத்திரத்தை நோக்கி அந்தக்கிரகம் நகருவதாகக் குறிக்கவேண்டியிருக்கிறது. இதுவன்றி, ஒரு கிரகத்தின் சாரத்தை ராசியையொட்டிமாத்திரம் சொல்வதினும், நக்ஷத்திரத்தையொட்டிச்சொல்வது கணக்கிடுவதற்கு வெகுஅனுகூலமாகும். இந்தக்கணக்கு விவரங்கள் எவ்விதமாக உபயோகப்படுகின்றன என்பது ஜாதக விமரிசையில் ஷட்வர்க்க விவரத்தில் தெளிவுறும்.

இருபத்தேழு நக்ஷத்திரங்களாவன:—

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | அசுவினி | | மேஷம் | | ஷை | $\frac{1}{2}$ | துலாம் |
| 2. | பரணி | | | 15. | சுவாதி | | |
| 3. | கிருத்திகை | $\frac{1}{4}$ | | 16. | விசாகம் | $\frac{3}{4}$ | |
| | ஷை | $\frac{3}{4}$ | விருஷபம் | | ஷை | $\frac{1}{4}$ | விருச்சிகம் |
| 4. | ரோகிணி | | | 17. | அனுராதா | | |
| 5. | மிருகசிரம் | $\frac{1}{2}$ | | 18. | ஜேஷ்டா | | |
| | ஷை | $\frac{1}{2}$ | மிதுனம் | 19. | மூலம் | | தனுசு |
| 6. | ஆர்த்திரை | | | 20. | பூர்வாஷாடம் | | |
| 7. | புனர்வஸு | $\frac{3}{4}$ | | 21. | உத்தராஷாடம் | $\frac{1}{4}$ | |
| | ஷை | $\frac{1}{4}$ | கடகம் | | ஷை | $\frac{3}{4}$ | மகரம் |
| 8. | புஷ்யம் | | | 22. | சிரவணம் | | |
| 9. | ஆச்லேஷம் | | | 23. | தனிஷ்டை | $\frac{1}{2}$ | |
| 10. | மகம் | | சிங்கம் | | ஷை | $\frac{1}{2}$ | கும்பம் |
| 11. | பூர்வபல்குனி | | | 24. | சதபிஷை | | |
| 12. | உத்தரை | $\frac{1}{4}$ | | 25. | பூர்வபத்திரை | $\frac{3}{4}$ | |
| | ஷை | $\frac{1}{4}$ | கன்னியை | | ஷை | $\frac{1}{4}$ | மீனம் |
| 13. | ஹஸ்தம் | | | 26. | உத்தரபத்திரை | | |
| 14. | சித்தா | $\frac{1}{2}$ | | 27. | ரேவதி | | |

ஆரியரது பஞ்சாங்கமும் அதன் பிரயோஜனமும்

அநாதிகாலமாக ஆரியர்கள் வைதிக மதப்பற்று மிகுந்தொழுகுகிறவர்களென்பதும், வேதமந்திரங்களை யோதுவதும் தேவதைகளைத் திருப்திப்படுத்தி அவர்களது பிரீதியைச் சம்பாதிப்பதுமே அவர்களுக்கு முக்கியமான காரியங்களென்பதும் எல்லோர்க்கும் பிரசித்தமாகத் தெரிந்தவிஷயங்களேயாம். அவர்களுடைய உத்தேசத்தை நிறைவேற்றும்பொருட்டு அவர்கள் தங்கள் பிரார்த்தனைகளைத் தேவதைகளுக்குச் செலுத்துவதற்கு ஏற்ற சமயங்கள் ஏவையெனத்தெ

ரிந்துகொள்ளும் விஷயத்தில் எப்பொழுதும் வெகுஜாக்கிரதையாக இருப்பது வழக்கமாகும். அந்த நற்சமயங்களைத்தெரிந்துகொள்வதற்குக் கிரகங்களின் சாரங்கள் தெரியவேண்டியது அவசியமாதலின் கணிதப்பதக்கங்கள் ஏற்படுத்தப்பெற்றன. பிரதிதினத்துச் சாரங்களையுங் கணக்கிட்டுக்கண்டு ஒருபுத்தகத்திற் பதிந்து வைத்திருக்கிறார்கள். அந்தப்புத்தகமே ஆரியரது "பஞ்சாங்கம்" என்பதாம்.

ஒரு தினத்திற்குரிய விசேஷ லக்ஷணத்தை நிர்ணயிக்கும்பொருட்டு ஆரியர்கள் ஒரு தினத்தை ஐந்துதலைவரிசையின்கீழ் வகுப்பார்கள். பஞ்சாங்கத்திற் குறிக்கப்பெற்றிருப்பன அவ் வைந்து தலைவரிசைகளுமேயாம். "பஞ்சாங்கம்" என்னும் பதத்திற்கு 'ஐந்து அங்கங்கள்' என்பதே பொருளாம். அவ் வைந்து அங்கங்களாவன:— 1. திதி, 2. வாரம், 3. யோகம், 4. கரணம், 5. நக்ஷத்திரம். அவை ஒவ்வொன்றும் தெரிவிக்கும் விஷயங்களை இனி விவரிப்பாம்.

கிரகங்களுக்கெல்லாம் அதிபதி சூரியனே என்பது நமது கொள்கை. வல்லமையிலும் அறிவிலும் சிறந்தவன் அவனேயென்றும், மழையை யுண்டாக்குகிறவன் அவனேயென்றும் ஆரியசாஸ்திரங்கள் கூறுகின்றன. யஜ்ஞங்கள், தர்ப்பணங்கள் முதலியனவனைத்தும் சூரியன் மூலமாகவே தேவதைகளுக்குச் சமர்ப்பிக்கப்படுகின்றன. காலத்தின் நன்மை தீமைகளையும் யோக்கியதையையும் நிச்சயிப்பதற்கு அவனுடைய சாரங்களே உத்தமமான ஆதாரங்களாகும். சூரியனது சாரத்தையொட்டிய கட்டங்களெல்லாம் (முக்கியமான சமயங்களெல்லாம்) வைதிகவிசேஷம் பொருந்தினவையென்பதும் தேவபூஜைக்குரியவை யென்பதும் நமது மதமாகும். ஆனதுபற்றியே, சாயைதிரும்பும் சமயங்களான சூரியோதயகாலம், சூரியாஸ்தமனகாலம், நடுப்பகல் ஆகிய இம் மூன்றுவேளைகளும் விசேஷமாக மதிக்கப்படுகின்றன. சூரியனது நித்திய கதியானது மாறுபாடடைகின்ற அயனங்களும், சூரியன் ஒரு ராசியைவிட்டு மற்றொரு ராசியிற் பிரவேசிக்கிற ஸௌரமாதத்து முதற்றேதியும், கிரகணதினங்களும் அப்படியே விசேஷமாக மதிக்கப்படுகின்றன.

சூரியனுக்கு இரண்டாவதாய் முக்கியமாகக் கொண்டாடப்படுபவன் சந்திரனாகும். சந்திரனையும் ஆரியர் பூஜிக்கின்றார்கள். சந்திர

கிரகணம், பௌர்ணமி, அமாவாசை ஆகிய இந்தத்தினங்கள் விசேஷ தினங்களாக மதிக்கப்படுகின்றன. இப்படி ஒரு தினத்தின் விசேஷத் தன்மையும் பரிசுத்தமும் சூரியசந்திரர்களின் சாரங்களைப் பொறுத்திருக்கின்றன.

ஆரியருடைய பஞ்சாங்கத்திற் கவனிக்கப்பெறுகிற ஐந்து அமிசங்களும் சூரியசந்திரர்களின் சம்பந்தமான விஷயங்களைப் பொறுத்திருக்கின்றன. திதி என்பது சூரியனுக்கும் சந்திரனுக்குமுள்ள தூரத்தைக் குறிக்கின்றது. அமாவாசைதினத்தில் சூரியனுஞ் சந்திரனும் ஒரே ராசியில் ஒரே நக்ஷத்திர மண்டலத்தில் இருக்கிறார்கள். பௌர்ணமி தினத்தன்று அவர்கள் ஒருவருக்கொருவர் நேர் எதிராக 180-டிக்கிரிகள் (பாகைகள்) விலகியிருக்கிறார்கள். இவ் விரண்டு தினங்களுக்கு மிடையே ஒவ்வொருநாளும் அவர்கள் இருக்கும் நிலையே பஞ்சாங்கத்தில் 'திதி' எனக் குறிக்கப்படுவதாம். இது கால அளவையின்சிறப்பு உட்பிரிவினையாகும். சூரியனுடைய அயனங்கள் மாறுபாடுறும் தேதிகள் (சூரியன் மேஷராசியிலும் துலாராசியிலும் பிரவேசிக்கும் தினங்கள்) முக்கியமான காலக்குறிப்புக்களென முன்னமே கூறியிருக்கின்றோம். கணக்கிடுவதற்கு அந்தத்தினங்கள் பெரிய ஆதாரங்களாகும்.

சூரியனுடைய அயனங்கள் உத்தராயனம், தக்ஷிணாயனம் என இரண்டல்லவே? அவ்விரண்டு அயனகோளங்களும் சந்திக்குமிடங்கள் இரண்டுள. அவ்விரண்டு கோளசந்திகளுக்கும் 'கிராந்திபாதங்கள்' (சூரியாயன சந்திகள்) என்று பெயர். அவ்விரண்டனுள் ஒரு கோளசந்தியில் புஷ்யநக்ஷத்திரமும், மற்றொருகோளசந்தியில் சிரவணநக்ஷத்திரமும் இருக்கின்றன. அந்த இரண்டு நக்ஷத்திரங்களிலிருந்து சூரிய சந்திரர்கள் இருக்கும் நிலையைக்கணக்கிட்டுச் சொல்வதே போகம் எனப்படுவது. 'யோகம்' என்னவென்று தெரிந்துகொள்வதற்கு மேற்சொல்லிய கிராந்திபாதங்களென்னும் கோளசந்தி நக்ஷத்திரங்களிலிருந்து சூரிய சந்திரர்கள் சஞ்சரிக்கும் நக்ஷத்திரங்களை எண்ணித் தொகுக்கவேண்டும். கால அளவையில் இதுவுமொரு சிறப்பு உட்பிரிவினையாகும்.

தினத்திற்குரிய நக்ஷத்திரமாவது அந்தத்தினத்திற் சந்திரன் சஞ்சரிக்கும் தாராகணமாம்.

வாரம் என்பது அந்தத்தினத்திற்கு அதிபதியாகிய கிரகத்தைக் குறிக்கின்றது. இதனை விவகரிக்கு முன்னர் "ஹோரை" என்னும் பதத்தை விளக்கவேண்டியது அவசியமாம்.

**ஹோரை** என்னும் பதத்திற்கு ஒரு மணிநேரம் என்று அர்த்தமாம். ஒருநாளைக்கு இருபத்துநான்கு ஹோரைகள் இருக்கின்றன. ஒவ்வொருஹோரைக்கும் ஒவ்வொரு கிரகாதிபதி யஜமானனாக இருக்கின்றான். கிரகாதிபதிகள் ஹோரைகளின்மீது ஆட்சிசெலுத்தும் முறை வருமாறு:—1. சூரியன், 2. சுக்கிரன், 3. புதன், 4. சந்திரன், 5. சனி, 6. குரு, 7. அங்காரகன். வாரத்தின் முதல் தினம் ஞாயிற்றுக்கிழமையாகும். அந்தத் தினத்திற்குள்ள இருபத்துநான்கு ஹோரைகளுக்கும் மேற்சொல்லிய கிரகாதிபதிகள் முறையே ஒவ்வொருஹோரைக்கு ஒவ்வொருவராக யஜமானராகிறார்கள். அன்றையத்தினத்தின் கடைசிஹோரையான 24-ஆவது ஹோரைக்குப் புதன் யஜமானனாகின்றான். (24-ஹோரைகள் ÷ 7-கிரகங்கள் = $3\frac{3}{7}$ வட்டம்; மூன்றுவட்டம் ஆனபிறகு நான்காவதுவட்டம் ஆரம்பித்து அதில் முதல்மூன்று கிரகங்களின் ஆட்சி பூர்த்தியாகி அன்றையத்தினம் முடிகின்றது). ஆதலின், அதற்கு அடுத்த ஹோரை நான்காவதான சந்திரனுடையதாகின்றது. ஆகவே அடுத்த தினம் திங்கட்கிழமை எனப்பட்டது. இவ்வாறே, மற்றைக்கிழமைகளும் சூரியோதயகாலத்தில் ஆட்சிபெற்றிருக்கும் கிரகத்தின் பெயரை ஏற்கலாயின.

ஆரியன்.

(இன்னும் வரும்)

---

## A MANUAL OF INDUSTRY

# கைத்தொழிற் கண்ணாடி

(௩௲௬-ஆம் பக்கத்தொடர்ச்சி)

உப்பு:—இந்தியாவில் உப்பு இரண்டுவகையில் உண்டாகிறது. 1. உவர்நீர் சுண்டுவது. 2. உப்புக்குன்றுகளில் வெட்டியெடுப்பது.

பம்பாய்முதல் ஒரிஸ்ஸா வரையிலுள்ள கடற்கரையோரம் முழுவதிலும் உப்பு காய்ச்சப்படுகின்றது; முக்கியமாகக் குஜராத்திலும் கீழ்ச்சமுத்திரக் கரையோரத்திலும் ராஜபுதனத்திலுள்ள ஸாம்பார் என்னும் ஏரியின் கரைகளிலும் உற்பத்தியாகின்றது. உப்புக் குன்றுகள் பஞ்சாப்பில் இருக்கின்றன. இந்த உப்புமலைத்தொடர் ஜீலம், ஷாஹப்பூர் என்னும் ஜில்லாக்களின் மத்தியிற் செல்லுகின்றது. முற்காலத்தில் ஐரோப்பாவுக்கு வெடியுப்பு இந்தியாவிலிருந்தே போகவேண்டும். இஃது இந்தியாவில் அநேக இடங்களில், முக்கியமாகக் கங்கைநதியின் மேற்புறத்துப் பள்ளத்தாக்குகளிற், பூமியின் மேல் அகப்படும். மண்உப்பு தேசமெங்கும் கொஞ்சங்கொஞ்சமாகக் காய்ச்சி எடுக்கிறார்கள்.

**தங்கம்:**—மைசூர் ஸம்ஸ்தானத்தில் நீலகிரிமலைகளிலும் வைநாட்டுமலைகளிலும் பொற்சுரங்கங்கள் வேலைசெய்யப்படுகின்றன. இந்தவேலை வரவர அபிவிருத்தியாகி இந்தியாவிற்கு லாபந்தருமென்று நம்புகிறோம். தற்காலத்திற் சுரங்கவேலை செய்பவர்களெல்லோரும் ஐரோப்பிய முதலாளிகளேயாவர்.

**தாமிரம்:**—அநேக இடங்களில் விசேஷமாக இருக்கின்றதென்று தெரிகிறது. பெரிய சுரங்கங்கள் இமாலயத்தின் கீழ்ச்சரிவுகளில் டார்ஜீலிங் முதல் குமாயூன் வரையில் இருக்கின்றன. இந்தியர் இதனைக் கொஞ்சமே எடுத்து உபயோகிக்கிறார்கள். பெருமுயற்சியோடு வேலைசெய்ய முயன்று பயன்படாமற் போயிற்று. இனி, தக்க பிரயத்தனங்கள் செய்யப்படுமென்று நம்புகிறோம். சென்னையில் சேலம்ஜில்லாவில் தாமிரம்அகப்படுகின்றது. ஆராய்ந்துபார்த்து உழைப்பவர்கள் இலர்.

**தகரம்:**—பர்மாவில் மேற்கியூபி, டாவாய் என்னும் இடங்களில் விசேஷமாக அகப்படுகின்றது. இந்தச் சுரங்கங்கள் சீனக்காரர்களுடைய சுவாதீனத்திலிருக்கின்றன. பெருத்த வியாபாரஞ் செய்வதற்குப் போதுமான அளவு கனமான சன்னங்கள் அகப்படுவதில்லை.

**ரத்தினங்கள்:**—வஜ்ரகரூர் முதலான இடங்களிற் சொற்பமாகக் கிடைக்கினும் வியாபாரத்திற் கேற்றவகையில்லை.

ROUGH NOTES ON INDIAN COMMERCE

## இந்திய வியாபார சம்பந்தமான பொதுக் குறிப்புகள்

ஆங்கிலேயத்தவரான ஈஸ்ட் இண்டியா கம்பெனியார் முதன் முதல் இந்தியாவில் நிலைகொண்டபொழுது அவர்கள் இத் தேசத்திற் கொள்ளப்படும் பொருள்களைச் சேகரித்து ஐரோப்பாவுக்கு ஏற்றுமதி செய்வதிலே மிகக் கருத்தாயிருந்தனர். அக் காலந்தொட்டே ஆங்கிலேயக் கைத்தொழிற் பொருள்களும் இந்தியாவில் அதிகமாகப் பரவத் தலைப்பட்டன. ஐரோப்பிய ஸம்ஸர்க்கம் அதிகப்பட அதிகப்பட, இத் தேசத்தவர்களுக்கு வேண்டிய சாமான்கள் எல்லாம் இங்கிலாந்திலிருந்து வரத்தலைப்பட்டன. அவர்களுடைய வியாபாரம் பெருகிற்று, நம் வியாபாரம் குறுகிற்று; நமது கைத்தொழில்களுட் பல ஆதரிப்பாரற்று அயர்ந்து ஒடுங்கி மாய்ந்துபோயின; இன்னுஞ் சில இருந்தவிடந் தெரியாமற்போகுந்தருவாயிலிருக்கின்றன; புதுவெள்ளம் வந்து பழைய வெள்ளத்தை அடித்துக்கொண்டுபோயிற்று; இப்பொழுது பட்டணவாசத்திலுள்ளவன் ஒருவனை நிறுத்தி அவன் அணிந்துள்ள ஆடைகளையும் நகைகளையும் அவன்வசத்துள்ள இதரவஸ்துக்களையும் ஆராய்ந்துபார்த்தால் ஒருதிருணமாவது (அற்பவஸ்துவாவது) இந்தியாவில் உற்பத்தியானதாக இராது. இந்தியாவின் பணத்தை ஐரோப்பாவுக்கு அனுப்பி அங்கிருந்துவந்தசாமான்களாகவே இருக்கும். நமது ஸ்த்ரீகளுக்குவேண்டிய புடவைகளும் இங்கிலாந்து ஜர்மனி முதலிய இடங்களிலிருந்து வருகின்றன. இதுவன்றியும் வீட்டிற்குள் சமையலறை முதலாய எல்லாப்பாகங்களிலுமுள்ள சாமான்களும் பிறநாட்டில் உற்பத்தியானவைகளாகவே இருக்கின்றன. இப்படியாயின் நாம் கடைத்தேறுவதெப்படி? அன்னியதேசியருடைய நன்மைக்காக, அவர்களுக்கு வியாபாரத்தினாற் பொருள் கிடைக்கும்பொருட்டு, நாம் ஜீவித்திருக்கிறோம். இந்தியக் கைத்தொழில்களெனுங் காவலாளிகளை உறங்கவைத்து இந்தியாவின் பணத்தைத் திருடிப் பிறர்கையிற் கொடுக்கவந்த கொடும்பாவிகளாகின்றோம். இத்தன்மையான நமது துரோகத்தினால் இந்தியாதேசம் மிகவும் ஏழைமைப்பட்டு மெலிந்தது. இனியாவது நாம் பச்சாத்தாபப்பட்டு இந்துதேசம் க்ஷீணித்துப்போகாவண்ணம் வகைதேடுவோமாக.

**கிராமத்துக் கைத்தொழிலாளிகள்:**—இத்தேசத்தில் ஒவ்வொரு கிராமமும், தனிமையாக அன்னியருடைய சகாயமின்றிவாழுவதற் கனுகூலமாக, அதில் எல்லாவிதத் தொழிலாளிகளும் உளர். நெசவுக்காரன், குயவன், கொல்லன், தட்டான், தச்சன், வாணியன், வர்த்தகன், அம்பட்டன், வண்ணுன், கன்னுன், சித்திரக்காரன், கல்தச்சன், கொல்லத்துக்காரன், தையற்காரன், உழவன், தோட்டக்காரன் முதலிய எல்லோரும் ஒவ்வொரு கிராமத்திலும் அததனுக்குத் தக்கபடி ஏற்பட்டிருக்கின்றனர். அவர்கள் செய்யுஞ் சாமான்கள் அந்தந்தக் கிராமத்திலேயே செலவாகும். ஏற்றுமதிக்குப் போதுமான அளவு சாமான்கள் செய்வதற்குத் தொழிலாளிகள் இல்லாவிடினும் கிராமத்தின் உபயோகத்திற்கு வேண்டிய அளவு உற்பத்தியாகும். மலிவான பிறநாட்டுச் சாமான்கள் வந்தபின் அவர்கள் ஆதரவின்றித் தொழில்களைக் கைவிட்டுக் கூலிவேலைதேடப் பட்டணவாசங்களை நாடவேண்டியதாயிற்று. முன்னர் ஈஸ்ட் இண்டியா கம்பெனியார் தம் நாட்டுக்கு இந்தியச்சாமான்களைச்செய்வித்து அனுப்பக்கருதிச் சில துறைமுகப்பட்டணங்களில்(அல்லது அவற்றிற்குச் சமீபமான இடங்களில்) தொழிலாளிகளை ஒருங்கு கூட்டி வேலைசெய்வித்து வந்தனர். அப்படிப்பட்ட ஊர்களிற் சில இன்றைக்கும் யாதேனுமொரு கைத்தொழிலுக்குப் பெயர்வாய்ந்தவைகளாக இருக்கின்றன. அவைகளுக்கும், பொதுவாக நமது இந்துதேசத்துப் பட்டணங்கள் எல்லாவற்றிற்கும், கைத்தொழில் முயற்சியின் விஷயத்தில், பெருங்காயம் வைத்திருந்த சிமிழுக்குள்ள பெருமையே தவிர வேறில்லை.

**பஞ்சுநெசவு:**—இந்தியாவில் இன்னும் கைமக்கங்களிற் பருத்திநூல் ஆடைகள் செய்துவருகிறுர்களே யென்று சில பிறநாட்டு வர்த்தகர்கள் எண்ணுகிறுர்கள். சுத்தமான வர்ணம்,கெட்டிச்சாயம், மாதிரியின் சௌந்தரியம் ஆகிய இவைகளில் இந்தியக் கைநெசவுத்துணிகள் உலகப்பிரசித்தமானவை. 1870-ஆம் வருஷத்தில் இந்தச் சென்னை ராஜதானியில் 280,000 மக்கங்கள் வேலைசெய்து வந்தன. அவைகளில் ஐம்பத்து இரண்டரைக்கோடிரூபா பெறுமானதுணிகள் வருஷவாரியில் நெசவாயின. இப்பொழுதுள்ள கைமக்கங்களின் சங்கியையைச் சொல்லிக்கொள்வதற்கு வெட்கமாக இருக்கின்றது.

மத்தியமாகாணங்களில்மக்கங்கள் கொஞ்சம்நடமாடுகின்றன. வங்காளத்தில் அவை அடியோடு அழிந்துவருகின்றன.

பட்டு நெசவு:—பர்மாவிலும் ஆஸாமிலும் இதுவீடுகள்தோறும் உண்டு. இந்தியாவில் மற்றைப்பாகங்களிற் சில பட்டணங்களில் மாத்திரம் உண்டு. நெசவுக்கு வேண்டிய பட்டுநூல் சீனுவிலிருந்து பெரும்பான்மை வருகிறது. மகம்மதியர் தரிக்கும் பட்டும் பருத்தியுங் கலந்த ஆடைகள் விசேஷமாகப் பஞ்சாப், ஸிந்து, ஆக்ரா, தக்ஷிணத்து ஹைதராபாத், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் நெய்யப்படுகின்றன. ‘கின்காப்’ வஸ்திரங்கள் பனரிஸ், மூர்ஷிதாபாத், ஆமதாபாத், திருச்சிராப்பள்ளி ஆகியவிடங்களில் நெய்யப்படுகின்றன. பூ முதலியன அச்சுப்பதிந்த பட்டாடைகள் ஸூரத்தில் நெய்கின்றார்கள்.

கம்பளி முதலியன:—பருத்திநூலிற் செய்யப்படுவன ஜமுக்காளமெனப்படும். ஆட்டுரோமம் முதலியவற்றால் செய்யப்படுவன கம்பளி, ரத்தினக்கம்பளி எனப்படும். ஜமுக்காளங்கள் வங்காளத்தில் அதிகம். கம்பளித் தினுசுகள் காச்மீரம், பஞ்சாப், ஸிந்து ஆக்ரா, மீர்ஸாபூர், ஜப்பல்பூர், தக்ஷிணத்தில் வாரங்கல், மலையாளம், மசூலிப்பட்டணம் ஆகிய இடங்களில் விசேஷம். பட்டுக்கம்பளிகள் தஞ்சாவூரிலும் சேலத்திலும்; சூரியகாந்திப் பட்டுக்கம்பளிகள் பனரிஸிலும், மூர்ஷிதாபாத்திலும் விசேஷம். பெங்களூர், லாஹூர், பனரிஸ் முதலிய இடங்களிலுள்ள ஜெயில்களில் ஜமுக்காளங்கள், கம்பளிகள் முதலியன நெய்கிறார்கள்.

நகைகள்:—இந்தியாவிலுள்ள தட்டான் விசுவகர்மாவேயாவான். நாணயமான வேலைத்திறமையிலும், புதியமுறைகள் அமைப்பதிலும் ரம்மியமாக அலங்காரப்படுத்துவதிலும் அவனுடைய சாமர்த்தியத்திற்கு ஈடு இல்லை. நல்ல நகைவேலைப்பாடு திருச்சிராப்பள்ளி, டில்லி, காச்மீரம் ஆகிய இடங்களிற் காணலாம். கெட்டிவெள்ளிவேலை கச்சு, லக்னோ (லக்ஷ்மணபுரி) டக்கா என்னுமிடங்களில் நடக்கிறது.

குயவர்வேலை:—எல்லா ஊர்களிலும் உண்டு; நேர்த்தியான வேலைப்பாடு அதிகமாக இல்லை; ஸிந்து ராஜ்யத்தில் அலங்காரமான

ஓடுகளும் மட்பாத்திரங்களும் செய்து அழகாக மெருகிடுகிறார்கள். ஹைதராபாத், கராச்சி, தட்டா, ஹாலா, லாஹூர், மூல்டான், மதுரை ஆகியவிடங்களில் நல்ல மட்கலங்கள் செய்யப்படுகின்றன.

தந்தவேலை:—அமிர்தசரசு, பனாரிஸ், மூர்ஷிதாபாத், விசாகபட்டணம், திருவாங்கூர் ஆகியவிடங்களில் நடக்கிறது.

இவ் விராஜதானியிலிருந்து இந்தியாவின் மற்றைப்பாகங்களுக்குச் சாமான் அனுப்புவதும் அந்தப்பாகங்களிலிருந்து இவ்விராஜதானிக்கு வருவித்துக்கொள்வதும் ஒருபாகம்; இவ்விராஜதானியிலிருந்து பிற நாட்டுக்கு ஏற்றுமதிசெய்வதும் வெளித்தேசங்களிலிருந்து இங்கு வரவழைத்துக்கொள்வதும் மற்றொருபாகம்; இப்படி வியாபாரஞ் செய்யப்படும் சாமான்களைப் பின்வரும் பதக்கங்களில் விளக்குவோம்:—

தோல்கள்:—ஏற்றுமதி செய்யுமுன் தோல்கள் பதனிட்டு மதுராஸ் துறைமுகத்திலிருந்து இங்லாண்டாகிய ஆங்கிலநாட்டுக்குப் போகின்றன.

காப்பீ:—தலைச்சேரி, மங்களூர், கோழிக்கோடு, பேபூர், மதுராஸ் ஆகிய துறைமுகங்களிலிருந்து ஏற்றுமதியாகின்றது; பாதிப்பாகம் ஆங்கிலநாட்டுக்கு, மூன்றிலொருபாகம் பிரான்சுக்கு, சில்லறையாக ஆசியா, துருக்கி, ஆஸ்டிரியா, எகிப்து, சிங்களம் ஆகிய இடங்களுக்குப் போகின்றது.

பஞ்சு:—பெரும்பான்மை ஆங்கில நாட்டுக்கும் சில்லறையாகப் பிரான்சு, இத்தலி ஆகிய தேசங்களுக்கும் தூத்துக்குடி(யிலிருந்து இங்கிலாண்டுக்கு) மதுராஸ், காக்கிநாடா(விலிருந்து விசேஷமாகப் பிரான்சுக்கு) ஆகிய துறைமுகங்களிலிருந்து ஏற்றுமதியாகின்றது.

எண்ணெய் வித்துக்கள்:—முக்கியமானவை எள்ளு, ஆமணக்கு, நிலக்கடலை. இவை மூன்றும் பிரான்சுக்குப் போகின்றன. ஆமணக்கு ருஷியாவுக்கும், ஆங்கிலநாட்டுக்கும், நிலக்கடலை இத்தலிக்கும் போகின்றன. ஏற்றுமதித்துறைகள் மதராஸ், காக்கிநாடா, கடலூர்.

## சென்னைராஜதானியிலிருந்து இந்தியாவின் மற்றைப்பாகங்களுக்கு ஏற்றுமதி

| பம்பாய்க்கு | வங்காளத்திற்கு | பர்மாவிற்கு | கச்சுக்கு | கோவாவிற்கு | திருவாங்கூருக்கு |
|---|---|---|---|---|---|
| வாசனைத்திரவியங்கள், எண்ணெய்கள், தேங்காய், கொப்பரைத்தேங்காய், மாத்தூலங்கள், கட்டைகள், காப்பீ, பஞ்சு கயிறு, நார், புரிகள், சாயச்சரக்குகள், அரிசி, சர்க்கரை. | எண்ணெய்வித்துக்கள், வாசனைத்திரவியங்கள் எண்ணெய்கள், சர்க்கரை, வறட்டுத்தோல், பதனிட்ட தோல்கள், மஞ்சள், ரெயில்வேசாமான்கள். | எண்ணெய் வித்துக்கள், எண்ணெய்கள், புகையிலை, உணவுக்குரிய சாமான்கள், பருத்திநூல் ஆடைகள். | தேங்காய், மாத்தூலங்கள், கட்டைகள். | அரிசி. | எண்ணெய்கள், கயிறு நார் புரிகள். |

## சென்னை ராஜதானியின் வெளிநாட்டு வியாபாரம்

| தேசத்தின் பெயர் | சென்னையிலிருந்து ஏற்றுமதி | வெளிநாட்டிலிருந்து இறக்குமதி |
|---|---|---|
| ஆங்கிலநாடு | வறட்டுத்தோல், பதனிட்டதோல், காப்பீ, அவுரி நீலம் பஞ்சு, வெல்லம், எண்ணெய்வித்துக்கள், எண்ணெய்கள், கயிறு, நார், புரிகள், ஷின்கோனுப்பட்டை, வாசனைத்திரவியங்கள், சாயச்சரக்குகள். | பருத்திநூலாடைகள், பருத்திநூலிழைகள், முறுக்கின நூல்கள், லோஹங்கள், ரெயில்வேசாமான்கள், சாராயங்கள். |

## சென்னைராஜதானியின் வெளிநாட்டு வியாபாரம் (தொடர்ச்சி)

| | | |
|---|---|---|
| பிரான்ஸ் | எண்ணெய்வித்துக்கள், காப்பி, வாசனைத்திரவியங்கள் பஞ்சு, வறட்டுத்தோல், பதனிட்டதோல்கள், அவுரி நீலம். | ஆடைகள் |
| சிங்களத்தீவு | அரிசி, பருத்திநூலாடைகள், உணவுக்குரியசாமான்கள், ஆடுமாடுகள். | கொட்டைப்பாக்கு, கோணிப்பை, மரத்தூலங்கள். |
| எகிப்து | அவுரி நீலம், வெல்லம். | |
| சிங்கப்பூர் முதலிய குடியேற்ற நாடுகள். | பருத்தி நூலாடைகள். | கொட்டைப்பாக்கு, பருத்திநூலாடைகள். |
| அமெரிக்கா ஐக்கியமாகாணங்கள். | தோல்கள், அவுரி நீலம். | மண் எண்ணெய். |
| இத்தலி | பஞ்சு, எண்ணெய்வித்துக்கள். | நற்பவழம். |
| ஆஸ்டிரியா | வறட்டுத்தோல், பதனிட்டதோல். | |

## இந்தியாவின் இதர பாகங்களிலிருந்து சென்னைராஜதானிக்கு இறக்குமதி.

| பம்பாயிலிருந்து. | வங்காளத்திலிருந்து. | பர்மாவிலிருந்து. |
|---|---|---|
| பருத்திநூலாடைகள், லோஹங்கள், நெல் தவிர மற்றைத் தானியங்கள், உப்பு. | பருத்திநூலாடைகள், லோஹங்கள், தானியங்கள், அரிசி, உப்பு, கோணிப்பைகள். | தானியங்கள், அரிசி, மரத்தூலங்கள், கட்டைகள். |

வாசனைத்திரவியங்கள்:—முக்கியமானவை மிளகு, சுக்கு, ஏலம், சம்பாரவர்க்கங்கள். முக்கியமாக மிளகு பிரான்சுக்கும் ஆங்கில நாட்டுக்கும் சமமாகவே போகின்றது; சுக்கும் ஏலமும் ஆங்கிலநாட்டுக்கே விசேஷமாக அனுப்பப்படுகின்றன. மிளகு அனுப்புந்துறைகள் தலைச்சேரி, கொச்சி, கோழிக்கோடு.

அவுரி நீலம்:—இந்த வியாபாரத்திற்கு முக்கியமான இடம் மதுராஸ் ஏறக்குறைய பாதி ஆங்கிலநாட்டுக்கு, மூன்றிலொரு பாகம் எகிப்துக்கு, சில்லறையாக அமெரிக்கா கண்டத்து ஐக்கிய மாகாணங்கள், ஆசியா, துருக்கி, பிரான்சு, ஆஸ்டிரியா ஆகிய தேசங்களுக்குப்போகின்றது. எகிப்து தேசத்திலுள்ள கீழ்ச்சாதியார் (எளியவர்) நீலந்தோய்த்த பருத்தி நூலாடை தரிக்கிறார்கள்.

சர்க்கரை:—இது சுத்தியாகாமல் வெல்லமாகவே ஏற்றுமதியாகின்றது; விசேஷமாக ஆங்கில நாட்டிற்கும், இரண்டாவது எகிப்துக்கும் போகின்றது.

## சென்னைத் துறைமுகங்கள்

இவ்விராஜதானியின் இருகரையிலுமுள்ள சிறுதுறைமுகங்களையும் அவற்றில் ஏற்றுமதி இறக்குமதியாகும் முக்கியமான சரக்குக்களையும் மாத்திரம் குறிப்பிடுவோம்.

பிமிலிப்பட்டணம்:-கீழ்க்கரையில் வடக்குக்கோடியிலுள்ளது; இங்கிருந்து அவுரி நீலம், மஞ்சள், வறட்டுத்தோல்கள் ஆகிய இவைகள் கல்கத்தாவுக்கும் இராஜதானித்துறைகளுக்கும் போகின்றன.

விசாகபட்டணம்:—சற்றுத்தெற்கே இருக்கின்றது; வியாபாரம் கொஞ்சம். சரக்குக்கள் பிமிலிப்பட்டணத்திற்போல்வன.

மசூலிப்பட்டணம்:—வியாபாரம் சொற்பம்; இங்கிருந்து மஞ்சள், பருத்தி, நூலாடைகள், எண்ணெய் வித்துக்கள் ஆகிய இவை கல்கத்தாவுக்குப்போய், அங்கிருந்து கோணிப்பைகள் இறக்குமதியாகின்றன.

கடலூர்:—வியாபாரம் அதிகமில்லை; இவ்விராஜதானியிலுள்ள மற்றைத்துறைகளுக்கு அரிசியும் சாராயங்களும் இங்கிருந்து போகின்றன.

காக்கிநாடாவிலிருந்து தேங்காய், கொப்பரை, வறட்டுத்தோல்கள், பதனிட்ட தோல்கள், ஆமணக்கெண்ணெய், புகையிலை ஆகிய இவை வெளியேறுகின்றன. புகையிலை அதிகமாகப் பர்மாவுக்குப் போகின்றது; முக்கியமான இறக்குமதி கோணிப்பை.

நாகபட்டணத்திலும் தூத்துக்குடியிலும் பிறநாட்டு வியாபாரம் மிகுதியாக நடக்கின்றது. வங்காளத்திலிருந்து அரிசியும் இந்த இராஜதானியின் இதர துறைமுகங்களிலிருந்து வெல்லமும் தூத்துக்குடிக்கு வருகின்றன.

**கோச்சி:**—மேல்கரையிலுள்ளது: இங்கிருந்து தென்னைநார், மஞ்சள், தேங்காய், கொப்பரை, தேங்காயெண்ணெய் ஆகிய இவை ஏராளமாகப் பம்பாய்க்கும் பர்மாவுக்கும் அனுப்பப்படுகின்றன; மிளகும் அரிசியும் கொஞ்சம் ஏற்றுமதியாகின்றன. இங்கு இறக்குமதி நாட்டுநூற் புடவைகளும் அரிசியுமாம்.

(இன்னும் வரும்)

தேசசஞ்சாரி.

---

உ

# ஜீவகாருண்யமும் புலாலுண்ணுமையும்

(௩உ௮-ம் பக்கத் தொடர்ச்சி.)

[ஸ்ரீ: கு. அண்ணாமலைப்பிள்ளையவர்கள் எழுதியது.]

"புலையென்னும் புலைதீரப் புனலென்னும் புனன்மூழ்கி
யலைகின்ற முழுமூட ரறிவென்ன வறிவென்ன
புலையன்றன் மலமுண்ணு மெனையுண்ணும் புலையற்குக்
குலமென்ன நலமென்ன கூகூவென் றனகோழி."

எனக்கூறிபவற்றை யுணர்ந்து கொலை, களவு, கள், காமம், பொய் என்னும் பஞ்சமகாபாதகங்களினுந் தலைமைபற்றிய கொலைத் தொ

ழிலை நீக்குவானாயின், சின்னாளில் ஏனைய பாதகங்களுக்கும் அபாத்திரனாவனென்பதற் கையமின்றாம்.

கொலைப்பாதகத்தால் நெடுநாள் நரகத்துன்பத்தை யனுபவிப்பதுமன்றிப் பல செனனமெடுத்திவ்வுலகத்தினும் பலவிதத்துன்பங்களையு மனுபவித்தாலன்றி யொழிதலின்றாம்.

சிவஞானசித்தியார்

"மேலைக்கு வித்து மாகி விளைந்தவை யுணவு மாகி
ஞாலத்து வருமா போல நாஞ்செயும் வினைக ளெல்லா
மேலத்தான் பலமாச் செய்யு மிதமகி தங்கட் கெல்லா
மூலத்த தாகி யென்றும் வந்திடு முறைமை யோடே."

என்பவற்றானுமுணர்க. கண்ணப்பநாயனர் வேட்டுவத்தொழில்புரிந்தும், மிருகங்களையும் பட்சிகளையுங் கொன்றுதின்றும், கடவுளுக்குச் சுவைதர மாம்சத்தை நிவேதித்தும் முத்தியடையவில்லையோ? அதுபோற் பத்திசெய்பவர்களுக்குக் கொலையாதிய தோடமுறாதெனின், கண்ணப்பநாயனர் அன்பின் பெருக்கத்தையும் அவரது செயலையும் உவமித்தல், எவ்வாற்றானும் பொருந்துவதன்றாம். ஏனெனின், சிவபெருமானுக்கு மிக்க அன்புண்டாம்வண்ணம் அரிய திருவாசகத்தை யருளின மாணிக்கவாசக சுவாமிகளின் பெருமை தோன்றச் சிவப்பிரகாசசுவாமிகள்,

"செங்கண்மா றடக்கையிற் சங்க நாண
முட்டாட் டாமரை முறுக்கவிழ் மலர்மேல்
வலம்புரி கிடக்கும் வாதவூ ரன்ப
பாடும் பணிநீ கூடும் பொருட்டு
மதுரைமா நகரிற் குதிரை மாறியும்
விண்புகழ் முடிமிசை மண்பொறை சுமந்து
நீற்றெழின் மேனியின் மாற்றடி பட்டு
சின்னைத் தொண்ட னென்னக் கொண்டன
னிருக்கு மடுக்க லரக்க னெடுப்ப
மூலைபொர வரைபொரு மொய்ம்பின்
மலைமக டழுவ மனமகிழ் வோனே."

என்று கூறியவாறே சிவபிரான் தொண்டுசெய்யுமாறு அரிய அன்பு பூண்ட ஸ்ரீமத்-மாணிக்கவாசகசுவாமிகள் திருவாசகத்தில்,

"கண்ணப்ப னொப்பதோ ரன்பின்மை கண்டபின்
னென்னப்ப னென்னொப்பி லென்னையுமாட் கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான்கருணை
சுண்ணப்பொன் னீற்றற்கே சென்றூதாய்கோத் தும்பி."

என்றதனாலும், திருக்களிற்றுப்படியாரில்,

"கண்ணப்ப னொப்பதோ ரன்பின்மை யென்றமையாற்
கண்ணப்ப னொப்பதோ ரன்பதனைக்—கண்ணப்பர்
தாமறிதல் காளத்தி யாரறித லல்லதுமற்
றாரறியு மன்பன் றது." என்றதனாலு முணர்க.

அன்பு, பத்தியென்பன ஒருபொருட் சொற்களேயாயினும், அன்பு ஆன்மநெகிழ்ச்சியும், பத்தி மனநெகிழ்ச்சியுமாம். ஏனைய அடியவர்களைப் பார்க்கினுங் கண்ணப்பநாயனார்க்கெழுந்த அன்பு ஆன்மநெகிழ்ச்சியினும் தீவிரதரமானதால், அவர்செயலைப்பின்பற்றி யொழுகல் அறிவுடையோர்கட் கழகன்றும். அன்பு அல்லது பத்தி என்பது,—மந்ததரம்,மந்தம், தீவிரம், தீவிரதரம் என நால்வகைப் படும். அரக்கானது வெயிலின் முன்னிருந்து வெதும்புதல் போல்வது மந்ததரம். மெழுகானது வெயிலுக்கெதிர்ப்படின் உருகுதல் போல்வது மந்தம். நெய்யானது சூட்டுக்கு இளகுதல் போல்வது தீவிரம். தைலதாரையானது இடையறாது ஒழுகுதல் போல்வது தீவிரதரமென்பது ; இஃது அவரது செயலாலே தெளியக்கிடந்தது.

பெரியபுராணம்

"மாகமார் திருக்கா ளத்தி மலையெழு கொழுந்தா யுள்ள
ஏகநா யகரைக் கண்டா ரெழுந்தபே ருவகை யன்பின்
வேகமா னதுமேற் செல்ல மிக்கதோர் விரைவி னோடு
மோகமா யோடிச் சென்றார் தழுவினார் மோந்து நின்றார்."
"நெடிதுபோ துயிர்த்து நின்று நிறைந்தெழு மயிர்க்கா லூறும்
வடிவெலாம் புளகம் பொங்க மலர்க்கணீ ரருவி பாய
வடியனேற் கிவர்தா மிங்கே யகப்பட்டா ரச்சோ வென்று
படியிலாப் பரிவு தானோர் படிவமாம் பரிசு தோன்ற."

என்றதனானே, சிவபிரானிடத்து அவ்வரிய அன்பு ஒருவர்க்குண்டா தற்கு ஏது, பூர்வம் பலபிறப்பிற் செய்த மெல்வினை முதிர்ச்சியன்றி, வல்வினையாகிய அரியசெயலைச்செய்ய நேரிடாது. இருவினையுளதென் பதனை;

திருக்களிற்றுப்படியார்

"மெல்வினையே யென்ன வியனுலகி லாற்றரிய
வல்வினையே யென்ன வருமிரண்டுஞ்—சொல்லிற்
சிவதன்ம மாமவற்றிற் சென்றதிலே செல்வாய்
பவகன்ம நீங்கும் படி." என்றதனானுணர்க.

கண்ணப்பநாயனார் சுவாமியைக்கண்டவழி வணங்குதல் பயின் றறியாதவராதலாலும், தாய்தந்தையர் தங்களுக்கு இனிய பிள்ளை யைக் கண்டவுடன் பேராசையினால் விரைந்தோடிப்போய்த் தழுவி மோத்தல் உலகியற்கையாதலானும், தமக்கு இனியராகிய சுவாமி யைக் கண்டவுடனே அதிக மோகமாக விரைந்தோடிச்சென்று தழுவி மோந்தார் என்க. இவர் தம்மினுஞ் சிவனே தமக்கு இனியராக, அதுபற்றியெழுந்து முறுகிவளர்ந்த அன்பே வடிவமாயினர்; அஃது இவர் திருக்காளத்தி மலையை அணுகுமுன் பெரும்பசியால் வருத்த முற்றும், சிவலிங்கப்பெருமானைக்கண்டபின் இவருக்கு அவ்வருத்த மென்பது சிறிதாயினுந் தோன்றாமையானுஞ், சிவபெருமான் துட்ட மிருகங்கள் திரியும் காட்டிலே தனித்திருத்தலால் அவரைத் தாம் பிரியமாட்டாமையையும், அவருக்கு அமுதுசெய்ய இறைச்சியின்மை யால் அதன்பொருட்டுத் தாம் பிரியவேண்டினமையையுங்குறித்து இவருக்கெழுந்த பதைப்பு மிகுதியினாலுந்தெளிக. அப் பதைப்பும், அதனால் நிகழ்ந்த செயல்களும் இங்கே,

"வெம்மறக் குலத்து வந்த வேட்டுவச் சாதியார்போற்
கைம்மலை கரடி வேங்கை யரிதிரி கானந் தன்னி
லும்முடன் றுணையா யுள்ளா ரொருவரு மின்றிச் செட்டே
னிம்மலைத் தனியே நீரிங் கிருப்பதே யென்று நைந்தார்."

என்னுஞ் செய்யுள் முதலாக "முன்புநின்றரிதினீங்கி" என்னுஞ் செய்யுளிறுதியாக எட்டுச் செய்யுட்களானு முணரற்பாலன. இன் னும், இவர் சிவபெருமானைக் கண்ட நாண்முதல் ஆறுநாளும், பசி,

நித்திரை என்பன இவருக்குச் சிறிதுந் தோன்ருமையானும், கூட வந்த வேடவனுகிய காடன் தம்மோடுபேசினமையும், அவனும்நாண னும் போயினமையும், தந்தையாகிய நாகன் முதலியோர் வந்து தம் மோடு பேசினமையும், தம்மைப் பிரிந்தமையும் பிறவும் இவருக்குச் சிறிதும் விளங்காமையானும், இவர் இடையருது ஒழுகுந் தைல தாரைபோல ஆவியோடாக்கை ஆனந்தமாகக்கசிந்துருகும் அன்புரு வமே ஆயினுரென்பது ஐயந்திரிபற வுணரப்படும்.

சிவபெருமான் உவப்பன செய்தலும், வெறுப்பன ஒழிதலும், அவரிடத்து அன்புடைமைக்கு அடையாளம் என்றீர்; சுவாமிக்கு யாகத்திலன்றிப் பிறவழியில் மாமிசம் நிவேதித்தலும், வாயிற் கொண்டுவரும் நீரால் அபிஷேகஞ் செய்தலுங், காற்செருப்பினுலே திருமுடியில் நிர்மாலியங்கழித்தலுந், தலையிற்சூட்டிய பூக்களைச்சாத் தலுமாகிய இவைகளை நினைப்பினும் எண்ணிறந்தகாலம் மிகக்கொடிய நரகத்துன்பம் பயக்குமன்றோ? அங்ஙனமாக, இவர் இவற்றைச்செய் தமை என்னையெனின், இவர் இப்பிறப்பில் ஓர் ஆசாரியரையடைந்து இது புண்ணியம், இது பாவம், இது செயற்பாலது, இஃது ஒழித்தற் பாலதென்று ஒருக்காலுங் கேட்டு அறிந்தவரல்லர்; முற்பிறப்பிற் செய்த சிவபுண்ணிய மிகுதியினுலே, தாஞ் சிவலிங்கப்பெருமானைத் தெரிசித்தபொழுது, திருமுடியிலேநீர்வார்த்து மலரிட்டிருத்தல் கண் டமையானும், ஒரு பார்ப்பான் எதையோ கொண்டுவந்து ஊட்டி னுன் என்று கேட்டமையானும், அவர்மாட்டு முறுகிவளர்ந்த அன்பி னுலே, இவையே சுவாமிக்கு உவப்பாவனவென்று துணிந்து அவ் வாறு செய்யநினைந்து, தமக்குமுன் இனியதாயுள்ளது மாமிசமேயாத லால், அதுவே சுவாமிக்கும் இனியதாம் என்று மாமிசத்தை வாயில் அதுக்கிச் சுவைபார்த்து இனியனவற்றைப் படைத்தலும், பாத்திர மின்மையால் அபிஷேகத்திற்கு ஜலம் வாயில் எடுத்துக்கொள்ளுத லும், ஒருகையிற் றேனெடு கலந்த மாமிசம் பொருந்திய கல்லையும், மற்றைக்கையில் அம்பும் வில்லும் இருத்தலாற் புஷ்பங்களைத் தலை யில் வைத்தலுந், திருமுடியினிர்மாலியத்தைக் காற்செருப்பினுற் கழித்தலுஞ் செய்தனர். இன்னுந் தாம் மாமிசம் உண்ணுதல் போலச் சுவாமியும் உண்பரென்று நினைந்து,

"கொழுவிய தசைக ளெல்லாங் கோலினிற் றெரிந்து கோத்தங்
கழலுறு பதத்திற் காய்ச்சிப் பல்லினு லதுக்கி நாவிற்
பழகிய வினிமை பார்த்துப் படைத்தவிவ் விறைச்சி சால
வழகிது நாய னீரே யமுதுசெய் தருளும்." என்று,

வேண்டிக்கோடலுஞ், சிவபெருமான் முடிவில்லாத ஆற்றலுடையவ ரென்பது நோக்காமல் நீர் துணையின்றித் தனித்திருக்கின்றீரே யென்று நித்திரையின்றி இராமுழுது மெதிர்நின்று காத்தலுஞ் செய்தனர்; இவையெல்லா முற்பிறப்பிற்செய்த சிவபுண்ணியமிகுதி யினுற் சிவபெருமான்மாட்டு எழுந்து இடையறாது, மேன்மேலு முறுகிவளர்ந்த அன்பின் பெருக்கத்தினுலே செய்யப்பட்டமையால் அவருக்கு மிக உவப்பாயின. இது சிவகோசரியாருக்குச் சிவபெருமான் திருவாய் மலர்ந்தருளிய பொருளேயுடைய "அவனுடைய வடிவெல்லாம்" என்பது முதல் "உனக்கவன்றன் செயல்காட்ட" என்பத னிறுதியாயுள்ள ஏழு திருவிருத்தங்களானு முணர்க.

"பொருட் பற்றிச் செய்கின்ற பூசனைகள் போல்விளங்கச்
செருப்புற்ற சீரடி வாய்க்கலச மூனமுதம்
விருப்புற்று வேடனுர் சேடறிய மெய்குளிர்ந்தங்
கருட்பெற்று நின்றவா தோணேக்க மாடாமோ."

என்னுந் திருவாசகத்தானுங் காண்க. பேய்க்கோட்பட்டார் செயலெல்லாம் பேயின் செயலாதல்போலப், பசுபோதம் அற்றுச் சிவபோதம் உற்ற இந் நாயனுரது செயலெல்லாம் சிவன்செயலே என்பது தெளிக.

சிவலிங்கப் பெருமானது திருக்கண்ணில் உதிரநீர் பாயக்கண்ட பொழுது, இந் நாயனுருக்கு உண்டாகிய பதைப்பு மிகுதியுந் தமது கண்ணைத் தாமேயிடக்கும்போது, இவருக்குச் சிறிதேனும் வருத்தந் தோன்றுமையும், அக் கண்ணைச் சிவனுடைய கண்ணில் அப்பினவுடனே உதிரநீர் நிற்கக்கண்டமையா லெழுந்த ஆனந்தமிகுதியும், சிவபெருமானது மற்றைக் கண்ணிலும் உதிரநீர் பாயக்கண்டு தமது மற்றைக்கண்ணை இடக்கும்போது சுவாமிகண்ணில் உதிரநீர் நிற்குமென்னுந் துணிவினுற் பிறந்த விருப்பமும் இவருக்குச் சிவன்மாட்டுள்ள அன்பே இன்பமாம் என்பதைத் தெளிவுற விளக்குகின்றன.

அன்பே யின்பமென்பது, "அன்பினு லடியே னாவியோ டாக்கை யானந்த மாய்க்கசிந் துருக" என்று திருவாசகத்தினும், "முடிவிலாவின்ப மான வன்பினை யெடுத்துக்காட்ட" எனப் பெரியபுராணத்தினும், "இறவாதவின்ப வன்பு வேண்டி" என்று காரைக்காலம்மையார் சரித்திரத்துங் கூறுமாற்றானும் அனுபவத்தானுமுணர்க.

இந் நாயனாரது உயர்வொப்பில்லாத பேரன்பை எம்போலியர்களு முணர்ந்து தம்மாட் டன்புசெய்துய்தற் பொருட்டுச் சிவகோசரியாருக்கு வெளிப்படுத்தப்புகுந்த பரமகருணாநிதியாகிய சிவபெருமான், இவர் தமது மற்றைக்கண்ணையும் இடக்கும்பொருட்டு அம்பை யூன்றும்போது, தரிக்கலாற்றாதவராகித் தமதுவியத்திஸ்தானமாகிய இலிங்கத்திற்றோன்றிய திருக்கையினாலே, இவர் கையை அம்போடு பிடித்துக்கொண்டு "நில்லுகண்ணப்ப நில்லுகண்ணப்ப வென்னன்புடைத்தோன்ற, னில்லுகண்ணப்ப." என்று திருவாய்மலர்ந்தருளினார். இதனால், இந் நாயனாரது அன்பிற்கும் சிவபெருமானது திருவருட்கும் உயர்வொப்பின்மை தெளிக. இவ்வாறு மும்முறை அருளிச் செய்தாரென்பது, நக்கீரதேவர் அருளிச்செய்த கண்ணப்பதேவர் திருமறத்தில்,

"மற்றைக் கண்ணிலும் வடிக்கணை மடுத்தலு
நில்லுகண் ணப்ப நில்லுகண் ணப்பவென்
னன்புடைத் தோன்ற னில்லுகண் ணப்பவென்
றின்னுரை யதனொடு மெழிற்சிவ லிங்கந்
தன்னிடைப் பிறந்த தடமலர்க் கையா
லன்னவன் றன்கை யம்பொடு மகப்படப்
பிடித் தருளினன்." என்பதனாலும்,

இங்கே மூன்றடுக்கு நாககங்கண ரமுதவாக்குக் கண்ணப்ப நிற்க எனக் கூறியவாற்றானும் உணர்க.

ஆதலாற் பெறற்கரிய மனிததேகத்தைப் பெற்றவர்கள் ஆன்மாக்க ளுய்யுமாறு சிவபெருமான் அருளிய வேதாகமங்களினும், அதின் வழிநூலாக ஆன்றோரருளிய திருவாக்குக்களினும், அமைந்துள்ள விதிநிடேதங்களைச் செவ்வனேயுணர்ந்து நிடேதமின்றி விதி

நெறியொழுகி ஐம்பெரும் பாதகத்தினு ளாதியாயமைந்த கொலைத் தொழிலினின்று நீங்கி அதன்வழி மேலுள்ள குற்றங்களைந்து குண மாகிய நன்னெறியொழுகுதலே அறிஞர்க்கழகாம். அஃதன்றிப் பல ஜன்மத்திற்செய்த சிவதரும மெல்வினையாற் சிவபெருமானிடத்துண் டாகிய பத்திமிகுதியாற்செய்த கண்ணப்பநாயனார்செயலையும், சிவமே யடியவரெனக் கேட்டதளிக்கும் விரதம்பூண்ட இயற்பகை நாயனர் செயற்கருஞ் செயலையும் நம்மனோர்க்கு உவம மெடுத்துக்காட்டல் மிகவும் அறிவின்மையேயாம்.

மெய்ம்மொழிச்சரிதை

"சத்திய முரைக்க நாளுஞ் சகலபல் லுயிர்கட் கெல்லா
நித்தலு மிதமே செய்ய நினைப்பது சிவத்தை யென்று
மத்தன்வே தாகமத்தி னருளிய பொருளிம் மூன்று
மெத்திறச் சமயத் தோர்க்கு மெம்மதங் களுக்கு மிட்டம்."

"உடுப்பது சில முணவுவீட் டமுத மூவப்பது ஞானமா மடந்தை
கொடுப்பது மருளைக் கொல்வது மறத்தை யிருப்பது மருந்தவக் குகையாம்
விடுப்பது குற்றந் தொடுப்பது சாந்தம் வெல்வதுந் தம்மைமெய்க் குரவ
னடித்தல மலரே முடிப்பது பிறப்பை யறுப்பவர்க் கருந்தொழி லிவையே."

சிவதருமத்தின் மெல்வினையாவது:—பிராதக்காலையிற் றேவால யங்களிற்சென் றுபயபத்தியுடனே திருவலகிடுதல், திருமெழுக்கிடுதல், திருவிளக்கிடுதல், நந்தவனம்வைத்தல், பூமாலைகட்டிச் சாத்தல், பிர தட்சணம் நமஸ்காரந் தோத்திரமாதிய செய்தல், சிவனடியவரைச் சிவனெனக்கண்டு வழிபட்டு வந்தித்தலாதியவும், வாசனைபொருந் திய புஷ்பம், சந்தன தூபம், தீபம், திருமஞ்சனுதிகள், பூஜோபகரணங் களெல்லாம் அமைத்துக்கொண்டு பஞ்சசுத்திகள்பண்ணிச் சிவாசன மூர்த்தி மூலங்களாலே முறையே, ஆசனமிட்டு மூர்த்தியை யெழுந் தருளச் செய்து, மூர்த்திமானுகிய பரஞ்சோதியைப் பாவனைசெய்து ஆவாகித்து, நின்மலமாகிய மெய்யன்பினல் அருச்சனை தோத்திர மாதி செய்தல் இவைகளேயாம்.

திருநாவுக்கரசுசுவாமிகள்

"நிலைபெறுமா றெண்ணுதியே னெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்

புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்று
மலைபுனல்சேர் செஞ்சடையெம் மாதீ யென்று
மாரூரா வென்றென்றே யலறா நில்லே."

"பூக்கைக் கொண்டரன் பொன்னடி போற்றிலார்
நாக்கைக் கொண்டர னாம நவில்கிலா
ராக்கைக் கேயிரை தேடி யலமந்து
காக்கைக் கேயிரை யாகிக் கழிவரே."

"கற்றுக் கொள்வன வாயுள நாவுள
இட்டுக் கொள்வன பூவுள நீருள
கற்றைச் செஞ்சடை யானுள னுமுளோ
மெற்றுக் கோகம னன்முனி வுண்பதே."

முற்பிறப்பின், வழுவின்றிச் செய்த மெல்வினை முதிர்ச்சியான் பின்பு செயற்கரிய செயலைச் செய்தவர்கள் கண்ணப்பநாயனர் முதலிய நாயன்மார்களிற் பலருளர்.

திருக்களிற்றுப்படியார்

"வாங்கடருஞ் செய்ய வைரவர்க்குத் தங்கள்
காங்களினு லன்றுசதி யாக்க—வீரங்காதே
கொல்வினையே செய்யுங் கொடுவினையே யானவற்றை
வல்வினையே யென்றதுநா மற்று."

"பாதக மென்றும் பழியென்றும் பாராதே
தாதையை வேதியனைத் தாளிரண்டுஞ்—சேதிப்பக்
கண்டீசர் தாமாம் பரிசளித்தார் கண்டாயே
சண்டீசர் தன்செயலாற் றான்."

"செய்யி லுகுத்த திருப்படி மாற்றதனை
யைய விதுவமுது செய்கென்று—பையவிருந்
தாட்டி யறுத்தவர்க்கே யூட்டி யறுத்தவரை
நாட்டியுரை செய்வதென்னே நாம்." இன்னும்,

"கடனிற வண்ணன் கண்ணொன் றிடந்து
மறைச்சிலம் பாற்று மலரடிக் கணியப்

பரிதிகொடுத்த சுருதிநா யகற்கு
முடிவிளக் கெரித்தும்............கணம்புல்லநாயனர்.
கடிமலர்க் கோதைச் சுரிகுழற் கருங்கட் டுணைவியை யளித்தும் } இயற்பகைநாயனர்.
மருமக னறும்பூங் கருமயி ருதவியும்......மானக்கஞ்சாறநாயனர்.
நென்முளை வாரியின் னமு தருத்தியும் } இளையாங்குடிமாறநாயனர்.
கோவண நேர்தனை நிறுத்துக் கொடுத்தும்.....அமர்நீதிநாயனர்.
அகப்படு மணிமீ னரற்கென விடுத்தும்........அதிபத்தநாயனர்.
பூட்டி யரிவா ளூட்டி யரிந்தும்...........அரிவாட்டாயநாயனர்.
தலையுடை யொலிக்குஞ் சிலையிடை மோதியும் } திருக்குறிப்புத்தொண்டர்.
மொய்ம்மலர்க்கோதை கைம்மலர் துணித்தும்...கலிக்கம்பநாயனர்.
தந்தையைத் தடிந்தும்........சண்டேசுரநாயனர்.
மைந்தனைக் கொன்றும்......சிறுத்தொண்டநாயனர்.
குற்றஞ் செய்த சுற்றங் களைந்தும்........கோட்புலிநாயனர்.
பூக்கொளு மாதர் மூக்கினை யரிந்தும்.....செருத்துணைநாயனர்.
இளமுலை மாதர் வளமை துறந்தும்........திருநீலகண்டநாயனர்.
பண்டைநா ளொருசிலர் தொண்டராயினர்."

ஆதலால், கண்ணப்ப நாயனர் முதலிய நாயன்மார்கள் புரிந்த அரிய தொண்டுகளை யாவருஞ் செய்தற்கருமையேயாம். தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்ணும் உலகோரது கூற்று மிக்க வறியாமையேயாம்.

---

உ

# கங்கைகொண்ட சோழபுரம்

கொள்ளிடக்கரையின் வடபுறமுள்ள சாலையில் திருச்சிராப் பள்ளி ஜில்லாவின் வடகிழக்குமூலையில் மனிதராலும், ரஸ்தாக்க ளினலும், புதியதாக ஓடும் ரயிலாலும் புறக்கணிக்கப்பட்ட நகர மொன்று இருந்து அழிந்துபோனதாக அங்குப்புலப்படும் கோபுரங் களால் அப்பாதை செல்வோருக்குத் தெரியவரும். இந்தப்பிர

தேசமே மனித சஞ்சாரமதிகமில்லாது, ஊர்களும் அடுத்தடுத்திரா மல் சோழதேசமென்று சொல்லப்படுவதற்குற்ற பல அவயவங்க ளான நதி, சோலை, வாவி முதலியவைகளின்றிக் கரம்பையாகச் செடி கொடிகளடர்ந்த தேசமாகக் காணப்படும். இவைகளைக்கடந்து அக் கோபுரந்தெரியுந் திக்குநோக்கிச் செல்லுவோமாயின், அவ்விடத் தில் முன்னர் வெகு உன்னதமான மாடமாளிகைகளும், கூடகோபு ரங்களும், அழகமைந்த மணிமாடவீதிகளும், இளமரக்காக்களும், வாவிசூழ் சோலைகளும் நிரம்பியிருந்து அதனைச்சுற்றிய புறமதில்க ளும், அதற்கு அழகினைச்செய்யக்கூடியதாய அரண்களும் அகழ்க ளுமிருந்ததாகப் புலப்படும். அப்படிப்பட்ட மாடமாளிகையிருந்த விடங்களில் அவைகட்குப்பதிலாக இடிந்த சுவர்களும், மண் மேடுகளும் காணப்படுகின்றன. இவைகளைத் தவிரவும் மேலே நாம் கூறிய கோபுரங்களையுடைய பாழான கோயிலொன்று புலப்ப டும். இக் கோயிலின் முன்னுள்ள கோபுர மிடிந்திருப்பதையும் அத னுள் பிரவேசிப்பதற்கு ஒருபுறம் ஒதுக்கப்பட்டிருக்கும் வழியை யுங் காண்பீர்கள். இதனுணுழைந்துசென்றால், தஞ்சாவூர் இராஜ ராஜேசுவரத்திலுள்ள சிவபெருமானையொப்ப 30-அடி உயரமுள்ள ஒரு சிவலிங்கம் புலப்படும். இச் சிவலிங்கம் நடுவில் இரண்டு பிளவுள்ளதாகவிருக்கக்காண்பீர்கள். இதனையாராதித்துவரும் ஆதி சைவரைக்கண்டு விசாரிக்கையில் இது கங்கைகொண்டசோழனெ ன்பானாற் கட்டுவிக்கப்பட்டதாகவும், பிறகுஇடிவிழுந்து சிவலிங் கம் இருபிளவாகப் போயிற்றென்றும், இதற்கு கங்ககோண்டாம் என்றுஞ் சொல்லக்கேட்பீர்கள். இந்த ஊரைப்பற்றிப் பரோலாவின் கஜட்டீரில் பின் வருமாறு கூறப்படுகிறது:—உடையார்பாளையந்தா லூக்காவில் கிழக்குமேற்காய் 10-மைல் நீளமுள்ள ஒரு பலமான கரையொன்று பல மதகுகளையுடையதாகப் புலப்படுகிறது. இது முதற்றரமான பாய்ச்சல் வசதியுள்ள ஏரியாகவிருந்திருக்க வேண்டு மென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. இந்த ஏரியானது இப் பொழுது புறக்கணிக்கப்பட்டு யாதொரு பிரயோஜனமுமற்ற தாகப் பெருங்காடுஞ் செடிகளு மண்டியிருக்கின்றது. இப்படி இவை யழிந்ததற்குக் காரணம் சண்டைக்குவந்த ஒரு எதிரியின்

செய்கையென்று ஜனங்கள் சொல்லிக்கொள்ளுகின்றனர். இதன் தெற்குக் கரையிற் காடடர்ந்த ஒரூருக்குக் கங்கைகொண்டபுரமெனச் சொல்லுகின்றனர். இதனையடுத்து ஒரு பெரிய கோயில் அதிக வேலைப்பாடுடையதாகப் புலப்படுகிறது. இதனைச்சுற்றிக் காடுகளடர்ந்து பாழாய்க்கிடக்கும் அநேக பெரியமாளிகைகள் புலப்படுகின்றனவாயினும், அவைகளுள் வயது முதிர்ந்த பெரியோர்கள் ஒரு அரமனையின் கட்டிடத்தைக் காண்பிக்கின்றனர். இந்த அரமனை செழிப்பாகவிருந்த காலத்தில் இதனை ஒரு சிற்றரசன் ஆண்டதாயும், அதனையடுத்த புலங்கள் இங்கே சொல்லப்பட்ட ஏரியாற் பாய்ந்து நீர்வளம் நிலவளமுடைய சோழநாடாக இருந்ததாயுஞ் சொல்லுகின்றனர். கங்கைகொண்டபுரங் கோயிலைப்பற்றிச்சொல்லும்போது, அக் கோயிலின் புறமதில்களையும் பெருஞ் சிற்பவேலை செய்யப்பட்ட கற்களையுமிடித்துக் கொள்ளிடத்திற் கட்டப்பட்டிருக்கும் லோயர் சொலரூன் அணைக்கட்டுக்கு உபயோகப்படுத்தினார்கள் என்றெழுதியிருக்கின்றார். சுவெல்லின் புராதனஜாப்தாவில் இந்தக் கோயிலைப்பற்றிச் சொல்லும்போது, கோயில் 582-அடிநீட்டமும், 372-அடி அகலமும், 174-அடி உயரமுமுடைய ஒரு மத்திய கோபுரத்துடன் தோன்றும்.

வெளிப்புற மதிலில் ஆறுகோபுரங்களும், நான்கு மூலைகளிலும் கொத்தளங்களும், அதனைச்சுற்றி மிக ஆழமான அகழியொன்றும் புலப்படும் என்கிறார். இப்படிப்பெயர் பெற்றதாகவிருந்து இடிந்து பாழாகும் நிலையிலும், சீர்காழி, சிதம்பரம் முதலிய தாலூக்காக்கள் செழிப்புற்றோங்க லோயர் அணைக்கட்டு என்னும் அணையைக் கொள்ளிடத்திற் கட்டுதற்குத் தளவாடங்கள் உதவிய இம்மாநகர் யார் காலத்தது, யார் கட்டியது என்று விசாரித்தல் அவசியமன்றோ?

இவ்வூரானது தருமபுரவாதீனத்துச் சற்குருக்களில் ஒருவராயிருந்து காசிக்ஷேத்திரத்தில் டில்லியை ஆண்ட முகம்மதிய பாதுஷாவினிடம் சமானமாகவிருந்து அவனது பாஷையைச் சரசுவதி கடாக்ஷத்தாற் பேசக்கற்று அநேக சன்மானங்களைப்பெற்ற குமரகுருபரர் ஸ்தாபித்த மடம் இருக்குந் திருப்பனைதாள் என்னுந் திருப்ப

னந்தானுக்கு நேர்வடபுறம் 3-மைலில் லோயர் அணைக்கட்டிருக்கிறது. அதிலிருந்து கிழக்காக ஏழு மைலில் இந்தக் கங்கைகொண்ட சோழபுர மிருக்கிறது. இந்தக் கங்கைகொண்ட சோழபுரத்தைக் கடைசியாகவாண்ட சோழமன்னர்களில் முதல்வனும், தஞ்சாவூரில் தனதுபோரால் இராஜ இராஜேசுவரம் என்னும் ஆலயத்தைக் கட்டியவனுமான இராஜாதி ராஜன் அல்லது இராஜராஜ சோழன்புதல்வன் இராஜேந்திரசோழன் கி. பி. 984-முதல் 1013-வரையில் அரசாண்ட இராஜராஜ சோழனுக்குப்பிறகு சுமார் 31-வருடம் அதாவது 1013 முதல் 1044-வரையிலாண்டதாகத் தெரிகிறது. அவனுடைய ஆளுகையில் தன் தகப்பனைவிட அநேக தேசங்களை வருடாவருடம் ஜெயித்து வந்தபிறகு அதற்கு அடையாளமாக இந்த ஊரையுண்டாக்கி இதிலிருந்து அரசாக்ஷி புரிந்தானென்பது அவன்காலத்து வெட்டுவித்த சாஸனங்களாற் புலப்படுகின்றது. அவன் தனதுஇராஜரீகத்தின் மூன்றுவது யாண்டுவரை யாதொருபோரும் நடாத்தி ஜெயம் பெற்றதாகத் தெரியவில்லை [1]. ஆறுவதுயாண்டு சாஸனத்தால், இடைத்துறைநாடு [2], வனவாசி [3], கொள்ளிப்பாக்கை [4], மண்ணைக்கடக்கம் [5], ஈழம், பாண்டிநாடு, அதனையடுத்த பல பழந்தீவுகளும் [6], கொண்டதாகக்காணப்படுகிறது [7]. பத்தாவதுவருடச்சாஸனங்களில்மேற்கூறியவைகளோடு, 'இருபத்தொருகா லரசுகளைக்கட்ட பரசுராமன் மேவருஞ் சாந்திமத்திவரண் சருதியிருத்திய செய்பொற்றிருத்தகு முடியும் [8], பயங்கொடுபழிமிக முயங்கியிபல் முதுகிட்டொளித்த

1. South Indian Inscriptions Vol. II. Part 1, *p.* 84. Part II. *pp.*

2. இது மைசூர் இராச்சியத்தில் ஒரு தாலூக்கா.

3. வனவாசி வடகன்னடம் ஜில்லாவிலுள்ளது. கதம்பவரசர்கட் குட்பட்டது.

4. கொள்ளிப்பாக்கை யென்பது மேலைச்சளுக்கிய வம்சத்தைச் சேர்ந்த நாடு. புராதன கோலப்பூர் என்பார் டாக்டர் உல்ஷ்.

5. மண்ணைக்கடக்கம் என்பது கதம்பநாடு.

6. பல பழந்தீவுகள் மால்திவுகள் லக்ஷத்தீவு முதலியவை.

7. S. I. G. Vol ii, *pp.* 90—91.

8. கோளம்.

சயசிங்கன் [9], அளப்பரும்பெருபுகழொடு பீடியல் இரட்டபாடி[10] எழரை யிலக்கமும் நவநெதிக்குலப்பெருமலைகளும் கொண்டதாகக் காணப்படுகிறது.

இதற்குப்பிறகுள்ள சாஸனங்கள் தெரியவில்லையாயினும் பத்தொன்பதாவது வருடத்துச் சாஸனமொன்று பதிக்கப்பட்டிருப்பதில் இன்னும் அநேக நாடுகள் ஜெயிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. விருத்தாசலத்தில் வெட்டப்பட்டிருக்கும் சாஸனமொன்று பதின்மூன்றாவது வருடத்தில் வெட்டப்பட்டதாயும் அதிற் கூறப்பட்ட வெற்றிகளே இப்பத்தொன்பதாவது வருடத்துச் சாஸனத்திலுமிருப்பதாகக் காலஞ்சென்ற மிஸ்டர் V. கனகசபைப்பிள்ளை எழுதுகிறார். அப்பத்தொன்பதாவது வருடத்துச் சாஸனத்தை இங்கே குறிக்கிறேன்.

(இன்னும் வரும்)

இலக்கணவிளக்க பரம்பரை,
திருவாரூர், சோமசுந்தரதேசிகன்.

---

ஸ்ரீ

# "நுண்பொருண்மாலை"

(௩௬0-ம் பக்கத்தொடர்ச்சி.)

௯௫௧. "இற்பிறந்தார்..............மொருங்கு."

நு - லை:—இற்பிறந்தாரென்றதனால் இல், குடி, குலமென்பன ஒருபொருட்கிளவி.

௯௫௫. "வழங்குவ..............லின்று."

நு - லை:—பழங்குடிப்பேர் சேர சோழ பாண்டியரென்றன போல்வனவென்க.

---

9. ஜயசிம்மன் மேலைச்சளுக்கிய நாட்டரசன் 1018–1040-வரை அரசாண்டவன்.

10. மைசூரிலுள்ளது.

௬௫௬. "சலம்பற்றிச்...............பார்."

நு - லை:—சலம் - வஞ்சனை.

௬௫௮. "நலத்தின்க...............படும்."

நு - லை:—நாரின்மை - ஈரமின்மை.

௬௬0. "நலம்வேண்டி...............பணிவு."

நு - லை:—"இனைத்தென வறிந்த சினைமுதற் கிளவிக்கு, வினைப் படு தொகுதியி னும்மை வேண்டும்" (தொல். சொல்-௩௩.) என் புழிப்போல ஈண்டும் வேண்டுமென்பது, விதிப்பொருட்டாயிற்று.

௬௬௨. "சிரினுஞ்...............பவர்."

நு - லை:—வேண்டுவர் - விரும்புவர்.

௬௬௫. "குன்றி...............செயின்."

நு - லை:—சொற்பின் வருநிலை. மேலையுரைத்ததெல்லாம் பொருட்பின் வருநிலையெனக் காண்க. "கல்லாது போகிய நாளும் பெரியவர்கட், செல்லாது வைகிய வைகலு - மொல்வ, கொடாஅ தொழிந்த பகலு முரைப்பிற், படாஅவாம் பண்புடையார் கண்." (நாலடி. பெரியாரைப்-௬.) "ஏந்தல் வண்ணஞ், சொல்லிய சொல்லிற் சொல்லியது சிறக்கும்." (தொல். பொருள். செய்-௨௩௨.)

௬௬௬. "புகழின்றாற்...............நிலை."

நு - லை:—மற்று - விட்டு.

௬௭௧. "ஒளியொருவற்...............மெனல்."

நு - லை:—ஒளிதாயகாலத்து மிருந்து தோன்றுதல். "ஒளிகிரு ளேங்குபுகழ் செய்யா" னென்றார் (நாலடி. செல்வநி-௩).

௬௭௨. "பிறப்பொக்கு...............யான்."

நு - லை:—பஞ்சபூத பரிணாமமாகிய வாக்கையை யென்றதனை லொன்றென்றாகுதல் பரிணாமம்.

௬௭௪. "ஒருமை...............னுண்டு."

நு - லை:—நிறையின் வழுவாமற் றம்மைத்தாங் காத்துக்கொண் டொழுகுமா றென்றுரைத்ததனாற் பொருளின்றொழி லுவமையினும் வந்தது.

கூஎசு. "சிறியா..............நோக்கு."

நு - லை:—நோக்கு - கருத்து.

கூஎஅ. "பணியுமா..............வியந்து."

நு - லை:—ஆமிரண்டுமசை. "குறைக்குமாங் கூன்கத்திகொண்" டென்பதுமது.

கூஅரு. "அன்புநா..........தூண்."

நு - லை:—எண்ணொடு முன்னவற்றோடுங் கூட்டுக.

கூஅச. "கொல்லா..............சால்பு."

நு - லை:—நலம், முன்னது அறம்; பின்னது குணம்.

கூஅகூ. "ஊழி............வார்."

நு - லை:—ஊழி - காலம். ஆழி - கரை. "பெருங்கடற் காழிய னையன் மாதோ" வென்றார் பிறருமெனக. மன் - ஒழியிசைக்கண்வந் தது.

கூகூரு. "உறுப்பொத்...........மொப்பு."

நு - லை:—வெறுத்தக்க - செறியத்தக்க. உறுப்பு - உடம்பு. வடநூலாரங்கமென்றமைபி (திருக். இறைமா-க-உரை.) னெனக.

கூகூகூ. "நகல்வல்ல...........திருள்."

நு - லை:—மாயிருஞாலம் - மிகவும் பெரிய ஞாலம்.

க000. "பண்பிலான்...........தற்று."

நு - லை:—கலந்தீமை, "செல்வந்தகைத் தென்பதுபோலும்" செல்வ மக்குற்றத்தா லொருவர்க்கும் பயன்படாது கெடுதலென் றுரைத்துத் தொழிலுவமையாதலிற் பொருள்களின்க ணுைத்த தொழில் வருவிக்கப்பட்ட தென்றார்.

(இன்னும் வரும்)

பத்திராதிபர்.

உ

மதுரைத் தமிழ்ச் சங்கத்து

## 1911-ளு மேமீ 1உ முதல் 31உ முடிவுவரையுள்ள வரவு செலவு கணக்கு.

| வரவு. | தொகை ரூபா. | அ. | ப. | செலவு. | தொகை. ரூபா. | அ. | ப. |
|---|---|---|---|---|---|---|---|
| 1911-ளு மேமீ த்துக்குரிய புதுக்கோட்டை சமஸ்தானம் மாதச்சந்தாவரவு ரூ. ... | 50 | 0 | 0 | சங்கம் சிப்பந்திகளுக்குச் சென்ற ஏப்ரில் மீ த்திய பட்வாடா ரிஜிஸ்டர்ப்படி சம்பளம் செல்லாக்கியது ரூ. ... | 358 | 7 | 6 |
| 1911-ளு மேமீ த்தில் நடந்தேறிய சங்கம் வருஷக்கூட்டத்தில் கானடுகாத்தான் மகா-ா-ா-ஸ்ரீ சா. ராம. மு. சித. பெத்தாச்சிசெட்டியாரவர்களிடமிருந்து நன்கொடைவரவுரூ. 1000-0-0 | | | | கலாசாலை மாணுக்கர்களுக்குச் சென்ற ஏப்ரில் மாசத்திய ஆகாராதி போஷணைக்குக் கொடுத்தது ரூ. ... | 78 | 9 | 2 |
| வைகாசி மாசத்துக்குரிய மாதச்சந்தாத்தொகை ரூ. 50—0—0 | | | | பைண்டிங் ஆபீசு ஸ்டேஷனரிச் செலவு ரூ. 0-5-0 | | | |
| | | | | ஷை ஆபீசு ரயில்வேசார்ஜ் செலவு ரூ. 0—4—0 | | | |
| ஆக மேற்காட்டிய விவரப்படி வரவு ரூ. ... | 1050 | 0 | 0 | ஷை ஆபீசு கண்டின்ஜன்சிச் செலவு ரூ. 11—0—5 | | | |
| செந்தமிழ்ச் சந்தாவரவு ரூ. ... | 45 | 4 | 0 | | | | |
| பிரிண்டிங் ஆபீசு அச்சுக்கூலி வரவு ரூ. ... | 222 | 14 | 0 | ஆக மேற்காட்டிய விவரப்படி பைண்டிங் ஆபீசுச் செலவு ரூ. ... | 11 | 9 | 5 |
| பைண்டிங் ஆபீசு வரவு ரூ. ... | 15 | 15 | 0 | பிரிண்டிங் ஆபீசு ஸ்டேஷனரிச்செலவுரூ. 41-7-0 | | | |

| | | | |
|---|---|---|---|
| புத்தக விற்பனை வரவு ரூ ... | 60 | 4 | 0 |
| சங்கம் காலிநிலம் மரக்கடை வாடகை விரோதி கிருது ௵ சித்திரை ௴த்துக்கு வரவு ... | 35 | 0 | 0 |
| சங்கம் கௌரவகாரியதரிசி மகா-ள-ள-ஸ்ரீ T. C. ஸ்ரீநிவாச ஐயங்காரவர்கள் பெண் விவாககாலத்தில் நன்கொடை சம்பாவனை வரவு ரூ ... | 100 | 0 | 0 |
| மாணவர் தமிழ்ச்சங்கம் பிரசிடெண்ட் மகா-ள-ஸ்ரீ கோபால கிருஷ்ணையரவர்கள் நன்கொடை வரவு ரூ ... | 3 | 0 | 0 |
| போஸ்டேஜ் ஸ்டாம்பு வரவு ரூ ... | 0 | 2 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| ஷை ஆபீசு ஆயில்என்ஜின் சம்பந்தமாய் எண்ணெய்ச்செலவு ரூ | 12—11—5 | | | |
| ஷை ஆபீசு கண்டின்ஜன்சிச் செலவு ரூ | 14-2-6 | | | |
| ஆக மேற்காட்டிய விவரப்படி பிரிண்டிங் ஆபீசுச் செலவு ரூ ... | | 68 | 4 | 11 |
| போஸ்டேஜ் வகையிற் செலவு ரூ | 14—0—0 | | | |
| தந்திவகையிற் செலவு ரூ | 3—4—0 | | | |
| ஆக போஸ்டேஜ் தந்திச்செலவு ரூ ... | | 17 | 4 | 0 |
| ரிபேர் வகையிற் செலவு ரூ ... | | 3 | 12 | 0 |
| பிளாக்வாங்கிய வகையில் ஸ்டாக் செலவு ரூ ... | | 3 | 0 | 0 |
| லைபிரேரி உபயோகத்துக்கு வாங்கிய புத்தகம் ரூ | | 0 | 8 | 0 |
| வருஷோற்சவ இன்விடேஷனுக்காக கார்டு வாங்கியது ரூ | 1—3—3 | | | |
| வருஷோற்சவ சமயற்காரர்கள் சம்பளம் ரூ | 20-0-0 | | | |
| வித்வான்கள் வகையறுப் பேர்களுக்கு சாப்பாடு முதலிய சப்ளைசெய்ததும் 2-வது வகுப்புச்சார்ஜ் கொடுத்தவகையிலும் செலவு ரூ | 201—9—2 | | | |

| | ரூ. | அ. | பை. | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | ரசீது ஸ்டாம்புச் செலவு ரூ 0—3—0 | | | |
| | | | | வண்டிவாடகை, கூலி வகையிற் செலவு 0—9—9 | | | |
| | | | | ஆபீசு ஸ்டேஷனரிச் செலவு 0—5—6 | | | |
| | | | | டைப்ரையிட்டிங் செய்த வகையிற் செலவு 1-9-0 | | | |
| | | | | ஆபீசு ஜெனலுக்குச் சன்ஷெட் தட்டி 2 செய்த வகையிற் செலவு ரூ 3—0—0 | | | |
| | | | | "பாண்டியம்" புதுலிபியை எலக்ட்ரோ ப்ளேட் செய்தவகையிற் செலவு ரூ 5—0—0 | | | |
| | | | | பிரிண்டிங் ஆபீசு பில்ப்படி ஆபீசு அச்சுக்கூலிச் செலவு ரூ 1—4—0 | | | |
| ஆக வரவு ரூ ... | 1582 | 7 | 0 | | | | |
| சென்ற எப்ரல்மீ" த்தில் கடைசித்தேதியில்கின்ற பாக்கித்தொகை ரூ ... | 346 | 6 | 6 | ஆக மேற்காட்டிய விவரப்படி செலவு ரூ | 234 | 11 | 8 |
| | | | | ஆக மொத்தம் செலவு ரூ | 776 | 2 | 8 |
| ஆக மொத்தம் வரவு ... | 1928 | 13 | 6 | போக பாக்கியிருப்பு ... | 1152 | 10 | 10 |
| ஆக மொத்தம் ரூ ... | 1928 | 13 | 6 | ஆக மொத்தம் ரூ | 1928 | 13 | 6 |

திரு. நாராயணையங்கார்,

மானேஜர்.

*Audited and found Correct*

S. GOPALASAMY IYENGAR,

*Auditor.* 5—8—11.

437

## மதுரைத் தமிழ்ச் சங்கத்து

# 1911 ௵ ஜூன்மீ 1௳ முதல் 30௳ முடிவுவரையுள்ள வரவு செலவு கணக்கு.

| வரவு | தொகை ரூ. | அ. | ப. | செலவு | தொகை ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|---|---|
| விரோதிகிருது ௵ ஆனிமீ த்துக்குரிய மாதச் சந்தாத்தொகை மகா-ா-ா-ஸ்ரீ சா. ராம. மு. சித. பெத்தாச்சிசெட்டியார் அவர்களிடமிருந்து வரவு ரூ. | 50 | 0 | 0 | சங்கம் சிப்பந்திகளுக்குச் சென்ற மேமீ த்திய பட்வாடா ரிஜிஸ்டர்ப்படி சம்பளம் செல்லாகியது ரூ. | 361 | 1 | 2 |
| செந்தமிழ்ச்சந்தா வரவு ரூ. | 33 | 2 | 0 | பைண்டிங் ஆபீசு ஸ்டேஷனரிச் செலவு 0-1-6 | | | |
| பிரிண்டிங் ஆபீசு அச்சுக்கூலி வரவு ... | 201 | 5 | 6 | ஷை ஆபீசு கண்டின்ஜன்சிச் செலவு 11—8—9 | | | |
| | | | | ஆக மேற்காட்டிய விவரப்படி செலவு ரூ. | 11 | 10 | 3 |
| பைண்டிங் ஆபீசு வரவு ... | 16 | 0 | 6 | பிரிண்டிங் ஆபீசு ஸ்டேஷனரிச்செலவு 33-0-6 | | | |
| புத்தக விற்பனை வரவு ... | 63 | 13 | 6 | ஷை ஆபீசு ரயில்வே சார்ஜ் செலவு 1—4—0 | | | |
| சங்கம் காலி நிலம் மரக்கடைவாடகை நாளது விரோதிகிருது ௵ வைகாசி மீ த்துக்கு வரவு ... | 35 | 0 | 0 | ஷை ஆபீசு ஆயில் எஞ்சின் சம்பந்தமாய் எண்ணெய்ச் செலவு 8—15—4 | | | |
| செந்தமிழ்கலாசாலை உபாத்தியாயர் மகா-ா-ஸ்ரீ அ. கோபாலையர் அவர்கள் பையன் உபநய | | | | ஷை ஆபீஸ்கண்டின்ஜன்சிச்செலவு 42—13—7 | | | |

438

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ன காலத்தில் நன்கொடை சம்பாவனை வரவு ரூ | 1 | 0 | 0 | ஆக மேற்காட்டிய விவரப்படி செலவு ரூ | 86 | 1 | 5 |
| கட்டிங்மெஷின் கத்திசாணைபிடித்த கூலிவரவு | 1 | 0 | 0 | போஸ்டேஜ் வகையிற் செலவு ... | 15 | 0 | 0 |
| | | | | ரிபேர் வகையிற் செலவு ... | 34 | 8 | 0 |
| | | | | கலாசாலைக் கட்டிடத்திற்கு 1911-௵ மார்ச்சு ௴ முதல் மே௴ முடிய ௴ 3-க்கு வாடகை செலுத்தியது ரூ ... | 54 | 0 | 0 |
| | | | | சங்கம் உபயோகத்துக்கு வாங்கி மாற்றிக்கொண்டிருக்கிற பங்களாவுக்கு சாதாரண-௵ மாசி௴ முதல் விரோதிகிருது ௵ வைகாசி ௴ முடிய ௴ 4-க்கு வாடகை செலுத்தியது | 80 | 0 | 0 |
| | | | | பிளாக்கு வாங்கிய வகையில் ஸ்டாக் செலவு ரூ | 3 | 0 | 0 |
| | | | | லைபிரேரி உபயோகத்துக்கு வாங்கிய புத்தகம் | 0 | 9 | 0 |
| | | | | செந்தமிழுக்கு விஷயதானம் செய்தசென்னை Mr. தி. அ. சுவாமிநாதையரவர்களுக்கு பிரசிடெண்ட் அவர்கள் உத்தரவுப்படி மணியார்டர்மூலம் அனுப்பியது ரூ 5–0–0 | | | |
| | | | | வண்டிவாடகை, கூலி, மணியார்டர் கமிஷன் வகையிற் செலவு ரூ 1—3—9 | | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | ஆபீசு உபயோகத்துக்கு மைஜாடி வாங்கியது ரூ 1-14-0 | | | |
| | | | | பிரிண்டிங் ஆபீசு பில்ப்படி ஆபீசு அச்சுக்கூலி வகையறுவுக்குச்செல் 85-2-0 | | | |
| ஆக வரவு ... | 401 | 5 | 6 | ஆக மேற்காட்டிய விவரப்படி செலவு ... | 93 | 3 | 9 |
| சென்ற மே மீ"த்தின் கடைசித்தேதியில் நின்ற பாக்கித்தொகை ... | 1152 | 10 | 10 | ஆகமொத்தம் செலவு ... | 739 | 1 | 7 |
| | | | | போக பாக்கியிருப்பு ... | 814 | 14 | 9 |
| ஆக மொத்தம் வரவு ... | 1554 | 0 | 4 | ஆக மொத்தம் ... | 1554 | 0 | 4 |
| ஆ மொத்சம் ... | 1554 | 0 | 4 | ஆக மொத்தம் ... | 1554 | 0 | 4 |

திரு. நாராயணையங்கார்,

மானேஜர்.

*Audited and found Correct*

**S. GOPALASAMY IYENGAR,**

*Auditor.* 5—8—11.

440